PUSHPAVALLI

A DRAMA IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM,
B.A , B.L.,

Author of:

" The Two Sisters," "Galava." "Vikramorvasi" "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," " Sarangadhara," " Simhalanatha," " Harischandra," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," " Ratnavali," " Malavikagnimitram," " The Tragedy of Silence," " The Good Fairy," " Geetha Manjari," " As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," " Chandrahari," " The Demon Land," " Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy Part II," " A Rehearsal " or " Sabapathy Part III," Blessed-in a Wife," "The Dancing Girl" " Subbadra-Arjuna" "Karna-The Giver" "Sahadeva's Stratagem" "Bricks -Between " "At Any Cost " " Surgeon General's prescription " "Vichu's Wife" "Sakuntala" "The Point of View " " The Two Selves," " Manohara " " Lord Buddha," " The Tragic Denoument " " The Sub Asst. Magistrate of Sultanpet " "The True Brother," etc. in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.

SECOND EDITION.

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE " PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1930

All Rights reserved.] [Price per Copy [illegible]

௳

புஷ்பவல்லி

இஃது

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட இதர தமிழ் நூல்கள் :—

"லீலாவதி-சுலோசனை" "கள்வர் தலைவன்," "விக்கிரம ஊர்வசி" "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "பிரஹசனங்கள்," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிசசந்திரன்," "ரத்னாவளி," "புத்த அவதாரம்" "கீதமஞ்சரி," "காலவரிஷி," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி-முதற் பாகம்," "பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம், "ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "சகதேவன் சூழ்ச்சி" "வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," "தாசிப்பெண்" "சுபத்திரார்ஜுனா" "கொடையாளி கர்ணன்" "சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து" "விச்சுவின் மனைவி" "மாளவிகாக்னிமித்திரம்" "இடைச்சுவர் இருபுறமும்" "என்ன நேர்ந்திடினும்" "சகுந்தலை" "நோக்கத்தின் குறிப்பு" "இரண்டு ஆத்மாக்கள்" "மனோஹரன்" "உண்மையான சகோதரன்" "விபரீதமான முடிவு" "சுல்தான் பேட்டை சப் அசிஸ்டெண்ட மாஜிஸ்டிரேட்" முதலியன.

இரண்டாம் பதிப்பு

சென்னை :

டௌடன் கம்பெனியாரின்

பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1930

காபி ரைட்] [விலை

முகவுரை

இந்நாடகத்தையாவது, அல்லது நான் பதிப்பித்துள்ள எனது மற்ற நாடகங்களையாவது, எந்த சபையாராவது ஆட வேண்டுமென்றால், முன்னதாக எனக்குச்சேர வேண்டிய ராயல்டி கட்டணத்தைக் கட்டி, என் அனுமதி பெற்றே, பிறகு ஆட வேண்டும்; இல்லாவிடில் காபிரைட் சட்டப்பிரகாரம், போலீஸ் கோர்ட்டில் தாவாவுக்கு உள்ளாவார்கள் என்பதை இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை ஆச்சாரப்பன் வீதி, 70-வது கதவிலக்கமுள்ள வீட்டிலும், எல்லாப்பிரபல புஸ்தக வியாபாரிகளிடமும் வாங்கிக் கொள்ளலாம்.

இப்படிக்கு,

ப. சம்பந்தம்.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

MY FRIEND

C. RANGAVADIVELU

புஷ்பவல்லி

நாடக பாத்திரங்கள்

நகுலராஜன்	ராஜமாபுரத்தரசன்.
சுமந்திரன்	நகுலராஜன் முதன் மந்திரி.
சந்திரவதனன்	நகுலராஜன் மகன்.
புத்திசேனன்	சுமந்திரன் மகன், சந்திரவதனனுடைய உயிர்த் தோழன்.
தனபாலசெட்டி	ராஜமாபுரத்தில் வசிக்கும் ஒரு வணிகன்.
ஜெயசீலன்	கலிங்கத்து மன்னன்.
சுபுத்தி	கலிங்கத்து மன்னன் முக்கியமந்திரி.
புஷ்பவல்லி	கலிங்கத்து மன்னன் புதல்வி.
சண்பகமாலை	தனபால செட்டியின் மகள்.
பானுமதி	புத்திசேனன் மனைவி.

விதூஷகன், ரிஷி, கொத்தவால், சேவர்கள், தோழிகள் முதலியோர்.

கதைநிகழ்டம்:—பெரும்பாலும் ராஜமாபுரத்திலும், கலிங்கத்திலும், சிறிதுபாகம் இடையிலுள்ள வனத்திலும்.

புஷ்பவல்லி

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—தனபால செட்டியின் வீட்டைச்சார்ந்த ஒரு தோட்டம்.

புஷ்பவல்லியும் தோழியும் புஷ்பக்கூடைகளுடன் வருகிருர்கள்.

புஷ். பிரியசகி, இன்று நமது பூந்தோட்டம் எவ்வளவு ரமணீயமாக இருக்கிறது கண்டாயா? நமது புஷ்பச் செடிகளெல்லாம் நன்ருய்ப் புஷ்பித்திருக்கின்றன—இத்தனைக் காலம் இல்லாது, இப்பொழுது இவ்வளவு புஷ்பங்கள் எங்கிருந்துண்டாயின?

தோ. அம்மா, வசந்தகாலம் ஆரம்பமாய் விட்டதல்லவா? அதனுல்தான் நமது தோட்டம் இவ்வளவு அழகாக விளங்குகிறது.

புஷ். ஆம், ஆம், நாம் பிதாவினுடைய பூஜைக்காகப் புஷ்பம் பறித்துச் செல்லவேண்டும். அடி சகி, நீ அதிகமாகப் பறிக்கிருயோ அல்லது நான் பறிக்கிறேனே? எதோ பார்ப்போம்—[புஷ்பச்செடிகள் அருகிற் சென்று] தோழி, காற்றில் இச்செடிகளெல்லாம் மெல்ல அசைவது, நம்மைத் தமது கரத்தால் அழைப்பது போலிருக்கிறது கண்டாயா?

தோ. ஆம், ஆம், அம்மா, புஷ்பங்களைச் சீக்கிரம் பறி.

[புஷ்பம் பறிக்கின்றனர்.]

புஷ். ஐயோ, இவ்வளவு அழகாகச் செடிகளில் தங்கியிருக்கும் புஷ்பங்களைப் பறிப்பது பாவமென்றே எனக்குத் தோன்றுகிறது.

தோ. கண்ணே, உனக்குப் புஷ்பவல்லியென்று பெயரிட்டது மிகவும் நன்றாகவே யிருக்கிறது! நீயும் இப்பூஞ்செடிகளிலொன்றைப்போலவே தோன்றுகிறாய்.

புஷ். ஏதடி விளையாடுகிறாயோ? அதிருக்கட்டும், சகி, இதோ பார்த்தாயா, உன்னைவிட அதிகமாக நான் புஷ்பங்களைப் பறித்து விட்டேன்.

தோ. சற்றுப்பொறு, அதோ அங்கிருக்குஞ் செடிகளில் மலர்கள் அதிகமாகவிருக்கின்றன, அங்குச் சென்று உன்னைப் பார்க்கிலும் எவ்வளவு அதிகமாகப் புஷ்பங்களெடுத்து வருகிறேன் பார்! [போகிறாள்.]

புத். [உள்ளிருந்து] அரசே! இப்படி வாரும், இப்படி இப்படி.

புஷ். ஆ! இதென்ன! நம்முடைய தோட்டத்தில் ஆண்குரல் கேட்கிறது. யாரோ வருகிறார்கள். அதுயாராக இருக்கலாம்? எல்லாம் இச்செடி மறைவில் ஒளித்திருந்து பார்ப்போம். [மறைந்து கொள்ளுகிறாள்.]

சந்திரவதனன் புத்திசேனன் வருகிறார்கள்.

சந். நண்பனே, என்ன ஆச்சரியம்! நம்முடைய பட்டணத்திற்கு அருகாமையில் வந்தபிறகும் இன்னும் நாம் அரண்மனைக்கு வழி தெரியாது திரிகிறோமே!

புத். அரசே, இனி நாம் வருந்தவேண்டியதில்லை. இங்குள்ளவர்களை யாரையாவது கேட்டால் நமதரண்மனைக்கு வழியைச்சொல்லி விடுவார்கள்.

சந். ஆம், ஆயினும்—தோழனே, இப்பூந்தோட்டத்தை நன்றாய்ப் பார்த்தாயோ? எவ்வளவு அழகாயிருக்கிறது! இது யாருடையது தெரியுமா?

புத். நான் அறியேன்—அரசே நேரமாய் விட்டது. மஹாராஜா உம்மைத்தேடுவார், நாம் சீக்கிரம் போகவேண்டும்.

சந். அப்படியல்ல புத்திசேனா, நாமிருவரும் இன்றைக்குவேட்டையாடி மிகவும் அலுத்திருக்கிறோம். இந்த அழகான தோட்டத்தில் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்து இளைப்பாறிப் பிறகு செல்லுவோம். [உட்காருகிறார்கள்.]

சந். ஆ! என்ன குளிர்ச்சியாகத் தென்றல் வீசுகிறது!

புத். ஆம், ஆம்! வசந்தகாலமன்றோ?—அப்பா!—ஆ! இளவரசே, இன்று வேட்டையாடியதுபோல நாமிதுவரையில் என்றுமாடியதில்லை.

சங். ஆம், புத்திசேனா, அம்மானைது நம்மை எவ்வளவு தூரம் போகச்செய்தது!

விதூ. [உள்ளிருந்து] யாரடா அது! இங்கே இளவரசை யாராவது கண்டீர்களா?

புத் ஓஹோ! விதூஷகர் நம்மைத்தேடிவருகிறார் போலிருக்கிறது. நண்பனே, நாமிருவரும் ஒளித்துக்கொண்டிருந்து அவர் என்ன சொல்லுகிறார் கேட்டறிவோம்.

சங். ஆம்! ஆம்! [இருவரும் ஒளிந்து கொள்கிறார்கள்]

விதூஷகர் வருகிறார்.

விதூ. ஐயோ! சாமி! தலைவிதி தலைவிதி! ராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் வேட்டையாடுவதற்குப் போவதென்ன, நானவர்களைத் தேடியலைவதென்ன! ஐயோ சாமி! மஹாராஜாவோ, எங்கு இவர்களைப் புலிமுதலியன தின்றுவிட்டனவோ வெனப்பயப்படுகிறார். இவர்களையா புலிதின்னும்! இவர்கள் புலிகளை விழுங்காமலிருந்தால் போதும்! அதிருக்கட்டும். இந்தத் துஷ்டப்பிள்ளைகளை எங்கென்றுதேடுவேன் நான்? எப்படியாவது கண்டு பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று ராஜா கட்டளை யிட்டு விட்டார். இதற்கென்ன செய்வது? சௌக்கியமாக இந்தச்சோலையில் தூங்கிவிட்டு, பிறகு ராஜாவிடம் சென்று எங்கு தேடியும் இவர்களைக்காணோமென்று சொல்லிவிடுகிறேன். அப்பா! இச்செடிமறைவில் நான நன்றாய்ப் படுத்துத் தூங்குகிறேன். [சந்திரவதனன் புத்திசேனன் ஒளித்திருக்கும் இடத்திற்கே போய் படுக்கப்போகிறார், அவர்களிருவரும் சிரித்துக்கொண்டே வெளியில் வருகிறார்கள்] ஓஹோ! அப்பொழுதே தெரியும் நீரிங்கிருப்பீரென்று, அப்பொழுதே தெரியும்! அரசே! காலைமுதலிதுவரையில் மூச்சுவிடவும் கூட நேரமில்லை, அப்படி தேடிக்கொண்டிருந்தேன்.—வாரும் போவோம்.

புத். ஏனையா! இங்கு படுத்துக்கொண்டு தூங்கும். நாங்கள் போய்வருகிறோம்.

சங். ஓய்! விதூஷகரே, என்ன சொன்னீர்? நாங்கள் துஷ்டப் பிள்ளைகளா? வாரும் பிதாவிடம். எங்களைத் தேடச் சொன்னால் இங்கு தூங்கவா பார்க்கிறீர்? வாரும், சொல்லுகிறேன், வாரும்.

விதூ. ஓஹோ! நாம் சொன்னதை யெல்லாம் கேட்டுவிட்டாற் போலிருக்கிறது—இளவரசே! இன்று துவாதசிதினம், கொஞ்சமதிகமாகச் சாப்பிட்டுவிட்டேன், அதனால் நடக்க முடியாமல் சற்று நித்திரை செய்யலாமென்று பார்த்தேன். ஏழைப் பிராமணன்! தயவிருக்கவேண்டும்.

சங். இல்லை இல்லை, வாரும் நேரமாய்விட்டது. நான் மஹாராஜாவிடம் ஒன்றுஞ் சொல்ல வில்லை.

விதூ. எல்லாம் தங்களுடைய இஷ்டம். [மூவரும் போகிறார்கள்.]

புஷ்பவல்லி வெளியே வருகிறாள்.

புஷ். ஐயோ! இன்னுங் கொஞ்சநேர மிருக்கலாகாதா? நான் எனது கண்ணாரப் பார்த்துக்கொண்டிருந்தேனே! அப்பாபி விதூஷகன் வந்து உம்மை அழைத்துச்சென்றானே! அவர் இருந்த விடத்தையாவது சற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆ! இளவரசருடைய அழகைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆயினும் நான் நேரில் கண்டதை யென்னென்று சொல்வேன்! மன்மதனை வென்ற அவருடைய ரூபமானது என் மனதை விட்டு இனி ஒருகாலு மகலாதே—என்ன! என்மனம் முன்னிருந்ததுபோலல்லாமல் வேறொரு மாதிரியாக விருக்கிறதே—நான் காதல் கொண்டிருக்கிறேனோ? இது வோ காதல்? ஆம்—ஆம்—அதற்குச் சந்தேகமில்லை! ஆ! அதோ நம்முடைய தோழிவருகிறாள், அவளிடம் நாம ஒன்றுஞ் சொல்லலாகாது—மனமே சற்றுப்பொறு.

தோழி வருகிறாள்.

தோ. புஷ்பவல்லி! இதோ பார்த்தாயா நான் எவ்வளவு புஷ்பங்கள் கொண்டு வந்திருக்கிறேன்—என்ன உன் முகத்தில் ஏதோ வித்தியாசம் தோன்றுகிறதே?

புஷ். சகி, ஒன்றுமில்லை என்னைவிட நீ அதிகமாகப்புஷ்பங்கள் பறித்து விட்டாயே என்று எனக்கு நாணமாயிருக்கிறது. வேறொன்றுமில்லை.—நாழியாய் விட்டது.—நாம் போவோம் வா. [போகிறார்கள்]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

நதுலராஜன் உட்கார்ந்திருக்கிறார், சுமந்திரன் எதிரில் நின்றுகொண்டிருக்கிறார். ஒரு சேவகன் வாயிலருகில் காவல் செய்கிறான்.

நது மந்திரி, நானொன்று தீர்மானித்தபிறகு, பின்வாங்கமாட்டேனென்று, உமக்கு நன்றாய்த்தெரியுமே! எப்படியாவது இவ்விராஜ்யமாகிய பெருஞ்சுமையை என்தோட்களினின்றும் நீக்கிவிட்டு நான் கானகஞ்சென்று தவம் புரியவேண்டும்

சும. மஹாராஜா, தாங்கள் அவ்வாறு தீர்மானிப்பதற்கு முன்பாக, அனேக விஷயங்களை யோசிக்கவேண்டும். தங்களுக்கோ, நாட்டை விட்டு காட்டிற்சென்று தவஞ்செய்ய வேண்டிய காலம், இன்னும் வரவில்லை. தாங்கள் இப்போதே, அவ்வாறு செய்வீராளுல், குடிகளெல்லாம் மிகவும் வருந்துவார்கள். அதுவுமன்றித் தங்கள் குமாரராகிய இளவரசர் இன்னும் சிறு பிராயத்துக் குணங்களையுடையவராயிருக்கிறார்.

நது. மந்திரி, என்ன மறுபடியும் மறுபடியும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர் ? இனி இவ்வாறு சொல்லுவதிற் பயனில்லை.

சும. மஹாராஜா, அப்புறம் தங்களுடைய இஷ்டம்

நகு ஆம், நான் சீக்கிரம் வனஞ்சென்று தவஞ்செய்யவேண்டிய காலம் வந்து விட்டது. சீக்கிரத்தில் எனது குமாரனாகிய சந்திரவதனனுக்கு முடி சூட்டவேண்டும்

சும. அதற்கென்ன, அப்படியே செய்யலாம்.

நகு. ஆயினும் மந்திரி, எனது குமாரன் நான் பலதரம் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசியும் ஒரே பிடிவாதமாக இப்பொழுது முடி சூட்டிக்கொள்ள மாட்டேனென்கிறான்.

சும. ஆதலால் மஹாராஜா, தாங்கள் இன்னும் இரண்டு மூன்று வருஷம் ஆண்டுகொண் டிருப்பீராயின், இதற்குள்ளாக இளவரசர்க்குத் தக்க வயது வரும்.

நகு மந்திரி, என்ன அதையே சொல்லுகிறீர்? எப்படியாவது என் குமாரனை அரசாக்ஷியை யேற்றுக்கொள்ளும்படியாகச் செய்யவேண்டும். சந்திரவதனன் என் வார்த்தையைத்தடுத்து அரசை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர் நீர்?

சும ஐயனே, வேறென்ன காரணமிருக்கப் போகிறது? சிறுவயதாகையால் அவ்வாறு கூறுகிறாரே யொழிய வேறொன்றுமில்லை.

நகு ஓ! அப்படியோ! அக்காரணம் நீர் அறியீர். என் குமாரன் நான் பலமுறை வற்புறுத்தியும் எனது வார்த்தையைத் தடுப்பதற்குக் காரணம்—உம்முடைய குமாரனே!

சும. மஹாராஜா! என்னுடைய குமாரனா?

நகு. மந்திரி, நான் சொல்லுவது புலப்படவில்லையோ? உம்முடைய குமாரன் புத்திசேனன்தான அதற்குக்காரணம்.

சும. மஹாராஜா! என்னுடைய புத்திரனிடம் என்ன தீய குணங்களுள்ளவோ? என்ன காரணம் பற்றியோ இவ்வாறு சொல்கிறீர்? எனக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

நகு அப்படி ஒன்றுமில்லை மந்திரி, உம்முடைய குமாரன் சிறந்த அறிவுடையவனே, உமக்கு மகனாகப் பிறந்தவனிடம் என்ன தீய குணங்களிருக்கப் போகின்றன? ஆயினும் இவ்விருவரும் எந்நேரமும் ஒன்றாய் விளையாடிக் கொண்டிருப்பதினாலேயே, எல்லாத் தீங்குகளும் விளை

கின்றன வென்று நான் நினைக்கிறேன். உம்முடைய குமாரனது சொல்லைக் கேட்டே சந்திரவதனன் என் கட்டளையை மறுக்கிறான். இதனுண்மையை இதோ உமக்கு நேராகக் காட்டுகிறேன்.—சேவகா, இளவரசரெங்கே?

சேவ. மஹாராஜா, உத்தியான வனத்தில் மந்திரி குமாரருடன் விளையாடிக்கொண்டிருக்கிறார்.

நகு. கேட்டீரோ மந்திரி! சேவகா, சந்திரவதனனை நான் உடனே இங்கு வரும்படிக்கட்டளை இட்டதாகப் போய்ச் சொல். [சேவகன் போகிறான்] சுமந்திரரே, இவர்களிருவரும் சற்றேனு மிணைபிரியா திருக்கிறார்கள். இதுதான் என் குமாரன் என் கட்டளையை மறுப்பதற்குக் காரணம். அவன் வந்தவுடன் நான் முடிசூட்டிக் கொள்ளும்படியாகக் கேட்கிறேன், என்ன அதற்குப் பதில் கூறுகிறானென்று நீரே கவனமாய்க்கேளும்.

சந்திரவதனன் புத்திசேனன் வருகிறார்கள்.

சந். தந்தையே, நமஸ்காரஞ் செய்கிறேன்.

புத். மஹாராஜா, நமஸ்காரம்.

நகு. குழந்தாய்! என் கண்மணியே! எனதருகில் வந்து உட்காருவாய். இந்நேரம் எங்கே போயிருந்தாய்? புத்திசேனா, ஏன் நிற்கிறாய்? நீயும் எனக்கொரு குமாரனன்றோ? இதோ இங்கு உட்கார். மந்திரி, சபைக்கு யார் வந்திருக்கிறார்கள் என்று அறிந்தீரா?

சும. ஆம்.

சந். ஐயனே, இன்று தாங்கள் என்னைத் துரிதமாக வரவழைத்தது என்னகாரணம் பற்றியோ? நானும் என் தோழனாகிய புத்திசேனனும் பூஞ்சோலையில் விளையாடிக் கொண்டிருந்தோம். சேவகன் வந்து தாங்கள் அழைப்பதாகக்கூறவே வந்தோம். என்ன விசேஷம்? சீக்கிரம் சொல்லும். நாங்கள் மறுபடியும் பூந்தோட்டத்திற்கு விரைவிற் செல்லவேண்டும்.

நகு. கேட்டீரோ, மந்திரி?

சங். தந்தாய், காலதாமதமாகிறது, என்ன சமாசாரம் விரைவிற் சொல்லும். எதற்காக என்னை அழைத்தீர்?

நகு. குழந்தாய் சந்திரவதனு, அவசரப்படாதே. நான் உன்னை ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து ஆலோசிப்பதற்காக வரவழைத்தேன்.

சங். ஆ! என்ன அவ்வளவு முக்கியமானது?

[சுமந்திரன் புத்திசேனனைச் சைகைசெய்து அழைத்து, அவனுடன் ஏதோ பேசி, அவனை மெல்ல அனுப்பிவிடுகிறான்.]

நகு. என் கண்மணியே, எனக்கோ வரவர வயது அதிகமாகி வருகிறது, இந்த அரசாக்ஷியென்னும் பெரும்பாரத்தை நெடுநாளாகத்தாங்கி நான் வருந்தியிருக்கிறேன். ஆதலால் இப்பெருஞ்சுமையை என் மீதினின்றும் இறக்கிவிட்டு, நான் கானக மடைந்து தவம்புரிந்து மோக்ஷ இன்பம்பெறத் தீர்மானித்திருக்கிறேன். இவ்விஷயத்தைக் குறித்து முன் பொருகால் உன்னிடம் யோசித்திருக்கிறே னல்லவா?

சங். ஓஹோ! இதுவா? ஆம் அனேகதரம் இதைப்பற்றி எனக்கு கூறியிருக்கிறீர்.

நகு. சந்திரவதனு, ஆதலால் உனக்கு சீக்கிரத்தில் முடிசூட்ட நிச்சயித்திருக்கிறேன். அதற்கிசைந்து இவ்விராஜ்யத்தை நீயாள ஒப்புக்கொள்ளவேண்டும். இதற்காகத்தான் உன்னை வரவழைத்தது.

சங். பிதா! இவ் விஷயத்தைப்பற்றி நானும் உம்மிடம் அனேக முறைகூறி யிருக்கிறேனல்லவா? நீர் காட்டிற் சென்று தவஞ்செய்வதற்கு இன்னும் காலம் வரவில்லையென்றே எனக்குத் தோற்றுகிறது. நீர் இன்னும் யௌவன திசையிலேயே யிருக்கிறீர். ஏன் மந்திரீ உமக்கென்ன தோற்றுகிறது?

நகு. சந்திரவதனு, நான் நீ முடிசூட்டிக் கொள்வாயென்று கட்டளையிட்டால் நீ என் கட்டளைப்படி நடப்பதோ, அல்லது என் வார்த்தையைத் தடுத்து எனக்கே நீ நியாயஞ் சொல்ல வருவதோ?

சந். ஐயனே, அப்படியல்ல, நானே சிறுவயதுடையவன், எனக்கோ இப்பெரிய அரசை நடத்தும் முறைமை தெரியாது. இன்னும் ஐந்தாறு வருஷங்கள் தாங்கள் இந்நாட்டை ஆண்டு கொண்டிருப்பீராயின் அதற்குள்ளாகச் செங்கோல் செலுத்து முறைமையை நன்றாய்க்கற்றவனாவேன்; இதற்குள்ளாக அரசைப் பூணுவதென்றால் என்னால் முடியாது.

நகு. ஆனால் அரசாட்சியை இப்பொழுது ஏற்றுக்கொள்ள மாட்டாய் நீ ?

சந். தந்தையே, இன்னுங்கேளும், நானே இப்பொழுது வாலிபனாக இருக்கிறேன். இவ்விளமையிலே நான் அனுபவிக்க வேண்டிய சுகங்களெல்லாம் இன்னும் முடிவுபெறவில்லை எனதுயிர் நண்பனாகிய புத்திசேனனும் சிறந்த வாலிபத்தை அடைந்திருக்கிறான். ஆதலால் நாங்களிருவரும் ஒருங்கு கூடி இந்த வயதில் அனுபவிக்க வேண்டியவைகளையெல்லாம் அனுபவித்தபிறகு நான் முடிசூட்டிக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். இப்பொழுதே நான் ராஜ்யபாரத்தை வகிப்பேனாயின் என் நண்பனுடன் கூடி அனுபவிக்க நான் எண்ணியிருக்கும் எண்ணங்களெல்லாம் வீணாகிவிடும், என் நண்பனும் வருந்துவான். ஆதலால் என்னைத் தாங்கள் மன்னிக்கவேண்டும்.

நகு. மந்திரி ! கேட்டீரோ, சந்திரவதனன் சொன்னதை?

சும. கேட்டேன் மஹாராஜா;—இளவரசே, பிதாவானவர் கட்டளையிட, அதனைத்தாங்கள் மறுப்பது நியாயமன்று, "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்னும் வாக்கியம் தாங்கள் அறிந்த விஷயமே. எல்லாமறிந்த தங்களுக்கு நான் என்ன நூதனமாகச் சொல்லப் போகிறேன் ?

சந். மந்திரி, நீர் கூறியது உண்மையே, ஆயினும் எனக்கு அரசாளுவதற்குரிய வயது வரவில்லை யென்று நீர் அறியீரோ ? நான் மறுக்கிறே னென்று எண்ண வேண்டாம். நான் வேண்டிக்கொள்வதெல்லாம் இன்னும் ஐந்தாறுவருஷகாலம் மஹாராஜா அரசாளவேண்டு மென்

2

பதே! அப்புறம் நான் மறுத்தேனுகில் பெரும்பிழையாம். இப்பொழுது என் இளமையை வீணிலே கழிப்பேனுகில், பிறகு இளமையினுல் பெறும் சுகம் நான் எப்பொழுது பெறக்கூடும்? ஆதலால் பிதா, நீர் என்னை தயைசெய்து மன்னிக்கவேண்டும். நான் இப்பொழுது முடிசூட்டிக்கொள்ள முடியாது.

நகு. சந்திரவதனு! என் கட்டளைப்படி நடக்கமாட்டாய், நீ?

சந். ஐயனே, இப்பொழுது என்னுல் முடியாது என்னை தேவரீர் மன்னிக்க வேண்டும். என் நண்பனை இங்கு காணேன்—என்ன என்மீது கோபங்கொண்டு சென்றுனே, தெரியவில்லை. நான் சீக்கிரத்தில் எனது நண்பனிடம் போகவேண்டும். எனக்கு விடைதந்தருள வேண்டும், பிதா, நான், போய்வருகிறேன். மந்திரி, நான் போய்வருகிறேன். [விரைந்து போகிறுன்.]

நகு. மந்திரி, தெரிந்ததா இப்பொழுதாவது, நான் சொன்னதினுண்மை?

சந். ஐயனே, எனக்கு ஒன்றுந் தோற்றவில்லை.

நகு. தோற்றுமா! ஆ! இவ்விருவரும் சற்றுநேரமாயினும் இணைபிரியா திருக்கிறுர்கள். மந்திரி, வேறுவழியைக் காணேன். இவர்களிருவருடைய நட்பைப் பிரித்துத் தான் தீரவேண்டும்.

சும. ஐயனே!

நகு. ஆம், வேறு வழியில்லை. இவர்களுடைய கூட்டுறவைப் பிரித்தாலொழிய எனதெண்ணம் நிறைவேறமாட்டாது.

சும. மஹாராஜா! இவர்களுடைய நட்பையா பிரிக்கவேண்டும்.

நகு. ஆம் ஆம். நானே ஒன்றைத் தீர்மானித்து விட்டால் பிறகு பின்வாங்குபவனல்லன். நான் அரசபாரத்தை என் சிரத்தினின்றும் நீக்கத் தீர்மானித்து விட்டேன்? சந்திர வதனனே முடிசூட்டிக்கொள்ள இசையேன் என்கிறுன். அவனை முடிசூட்டிக்கொள்ளச் செய்வதற்கு ஓரேவழியுண்டு. அதாவது, இவ்விருவருடைய சிநேகத்தைப் பிரிப்பதுதான்.

சும. ராஜேஸ்வரா! இவ்விஷயத்தைக் குறித்து நான் சற்று என்னுடைய எண்ணத்தை வெளியிட உத்தரவுகொடுக்க வேண்டும்.

நகு. என்ன ? ஒன்றும் பயப்படவேண்டாம், சொல்லும்.

சும. அரசச் சிங்கமே! அறிவு சற்றேனு மில்லாது காட்டில் வாழும் இரண்டு மிருகங்களை ஒரு கூட்டிலடைத்து, சிறிதுகால மானபின், அவைகளைப் பிரித்து விட்டால் என்ன வாட்டங்கொள்ளுகின்றன! அது நமக்கே எவ்வளவு இரக்கமாக இருக்கிறது! அப்படியிருக்க, சகல நற்குணங்களும் நல்லறிவும் பெற்று உயிர்நேயங்கொண்ட இரண்டு உததம குலத்திலுதித்த வாலிபர்களைப் பிரிப்பதென்றால் எவ்வளவு துக்ககரமான விஷயம்! நட்பைப் பிரிப்பதைப் பார்க்கிலும் கொடுமையான தீமை இவ்வுலகிலில்லையென்று ஸ்மிருதிகளெல்லாம் முறையிடுகின்றன. இவைகளை யெல்லாம் தாங்கள் யோசிக்கவேண்டும்.

நகு. சுமந்திரரே, ஆம் நீர் கூறியவெல்லாம் உண்மையே! ஆயினும் என்னெண்ணத்தை நிறைவேற்றுதற்கு வேறுவழியைக் காட்டும். எனக்கோ வேறுமார்க்கந் தோற்றவில்லை.

சும. எனக்கும் வேறுவழி யகப்படவில்லை.

நகு. அப்படியானால் நான் சொல்வதை ஏன் மறுக்கிறீர்? வேறு வழியாவது காண்பியும், அல்லது நான் கூறுவதற்காவது இசையும்!

சும. ராஜாதிராஜனே! இன்னும் சற்று யோசித்துப்பாரும். இப்படிச் செய்வதனால் அனேகங் கெடுதிகள் விளையுமென்பதற் கையமில்லை. உயிர் நேயங்கொண்டிருக்கும் இருவர் நட்பைப் பிரிப்பதோ மிகவுங் கடினம். அப்படி பிரிக்கப்பட்டால் அவர்கள் மறுபடியும் கூடுவது அதினுங்கடினம்; இளவரசரும் புத்திசேனனும் உத்தம குலத்தி லுதிததவராதலால் தங்களுடைய சினேகத்திற்குத் தீமை நேருமாயின், தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டாலுங்கொள்வர். என் மைந்தனிறந்தால் எனக்

குப் பெரிதல்ல, இளவரசருக்கு என்னதீங்கு சம்பவிக்குமோ என்று சலங்குகிறேன்.

நகு. ஓஹோ! அப்படியொன்றும் வாராது.

சும. ஐயனே, நான் என்கடனை யொழித்துவிட்டேன். அப்புறம் மஹாராஜாவின் இஷ்டம் இவ்வாறு செய்வதினால் ஏதாவது தீங்குவரின் அடியேனைக் கேட்கலாகாது. இப்பொழுதே சொல்லிவிட்டேன்.

நகு. மந்திரி! என்ன தீங்குவரப்போகிறது? அப்படி யொன்றும் வாராதென்றே உண்மையாக நம்புகிறேன். சிறிது காலம் பிரிந்திருக்கப் போகிறார்கள். அப்புறம் ஒருங்கு சேர்வார்கள். அவ்வளவே, ஆயினும் இவர்களுடைய இணைபிரியா நட்பை எவ்வாறு பேதிப்பது? அதற்கு ஒரு மார்க்கஞ் சொல்லமாட்டுவாயா?

சும. ஐயனே, இவ்விஷயத்தைப்பற்றி என்னைக் கேட்பதில் பயனில்லை எனக்கு ஒன்றுந்தோறறவில்லை.

நகு. இதற்கென் செய்வது?

விதூஷகர் வருகிறார்.

ஓஹோ! வாரும் விதூஷகரே, என்ன விசேஷம்?

விதூ. ராஜாதிராஜனே! ராஜேஸ்வரா! த்ரிபுவன சக்ரவர்த்தியே! அனேகவருஷகாலம் ஒரு குறைவுமின்றி சகல சம்பத்துகளையும் பெற்று புதரமித்ர களத்திராதியருடன்—நான் வாழும்படி பரமேஸ்வரன் கிருபை செய்வாராக!

நகு. ஆ! ஆ! என்ன சொன்னீர்? எனக்கு நல்ல ஆசீர்வாதம் கூறினீரே! நீர் வாழவேண்டுவதுதான் எனக்காசியோ?

விதூ. மஹாராஜா! அப்படியல்ல அதைப் பார்க்கிலும் உமக்குக் கூறவேண்டிய சிறந்தவாழ்த்து வேறொன்றும் என் புத்தியிற் படவில்லை, நானே உமதருளினால் வாழ்வைப் பெற்றிருப்பவன், அப்படி யிருக்க, நானொரு குறைவுமின்றிச் சகல செல்வங்களும் பெற்று வாழ்ந்திருப்பதற்குத் தாங்கள் எவ்வளவு மேன்மையும் செல்வமும் சுகமும் அடைந்திருக்கவேண்டும்? அதற்காகவே அவ்வாறு கூறினேன்.

நகு. போதும் போதும் விதூஷகரே! மிகவும் நன்றாயிருக்கிறது! இப்பொழுது வேடிக்கையாய்ப் பேசுவதற்குக் காலமன்று. நானொரு முக்கியமான விஷயத்தைக் குறித்து உம்மைக் கேட்கவேண்டும். என்ன சொல்கிறீர்?

வி. கேட்கவேண்டும், என்ன சொல்கிறீர்? என்றால், என்ன சொல்வது? சொல்லுங்களென்று நான் சொல்லவேண்டும்.

நகு. விதூஷகரே இப்பொழுது வேடிக்கையாகப் பேசவேண்டாமென்று கூறியும் பேசுகிறீர், ஜாக்கிரதை எனக்குக் கோபம் வரும்.

வி. சரி, யானைக்குக் கோபம்வந்தால் பூனை என்செய்வது? சொல்லும்.

நகு. நான் இப்பொழுது உம்மிடங் கூறப்போகிறதை வேறொருவரிடமுங் கூறலாகாது மந்திரி, நீருமப்படியே, வேறு யாவர்க்காயினும் கூறினீராயின் சிரசாக்கினை செய்து விடுவேன்.

வி. ஆனால் அப்படிப்பட்டதை நான் கேட்கவேயில்லை கேட்டாலல்லவோ தொந்தரவு.

நகு என்ன விளையாடுகிறீர்! பத்திரம்!—மிகவும் அன்யோன்யமான இரண்டு நண்பரைப் பிரிக்கவேண்டும். அது யாரால் முடியும்?

வி. மஹாராஜா, இவ்விரண்டு பேர் யார்?

நகு. அது உமக்கேன்? சிறந்த வமிசத்திலுதித்த வாலிபரிருவர் இணைபிரியா நேசங்கொண் டிருக்கின்றனர். அவர்களுடைய நட்பைப் பிரிக்கவேண்டும்.

வி. ஒஹோ! தெரிந்து கொண்டேன். சற்றேனும் ஒருவரை விட்டொருவர் பிரியாத சிறந்த நேசங்கொண் டிருப்பவர்கள் நமது நாட்டில் இளவரசரும் மந்திரிகுமாரனு மன்றி வேறு யாரிருக்கின்றனர்? ஐயனே, அப்படிப்பட்ட சிறந்த நட்பை ஏன் பிரிக்கவேண்டும்? அது மிகவும் தீமையன்றோ, அன்றியும் அதனால் ஏதாவது துன்பம் வருமல்லவா?

நகு. ஓய்! விதூஷகரே, என்ன, நான் கேட்டதற்கு உத்தரம் சொல்லுகிறீரா, அல்லது எனக்கு நியாயம் கூறவருகிறீரா?

வி. உள்ளத்தைச்சொன்னால்—

நகு. என்ன சொன்னீர்?

வி. மஹாராஜா, நான் ஒன்றுஞ் சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும்.

நகு. அக்காரியஞ் செய்யத் தக்கவர்கள் நமது நாட்டில் உளரோ இலரோ?

வி. [ஒரு புறமாக] இனி நாமென்ன சொல்லியும் பிரயோஜனமில்லை. சரி—அரசே, இதைப்பற்றி சற்று யோசிக்க வேண்டும்.-- யார் இது செய்வார்? நம்முடைய தேசத்தில் நான்கு வருணத்தார் இருக்கின்றனர் அல்லவா? முதல் வருணத்தாராகிய பிராமணர்கள் இது செய்யார். அறு தொழிலாளர் என்று பெயர் பெற்றிருந்தும் இப்பொழுது அவர்கள் செய்வது ஒருதொழிலே—ஏற்றல்—அது தவிர வேறொன்றுந் தெரியாது. கலியுகம் அல்லவா? க்ஷத்திரியர்களோ, இருவருடைய நட்பைப் பிரிக்க வேண்டுமென்றால், இவ்வளவுதானா? அதென்ன ஒரு கஷ்டமா? வாளையெடுத்து வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாய் இரண்டு பேரையும் வெட்டி விட்டால் போகிறது, என்பார்கள். ஆதலால் அவர்களும் நமக்குப் பிரயோஜனமிலர்—மஹாராஜா, என் மீது கோபங் கொள்ளலாகாது.

நகு. இல்லை இல்லை! சொல்லும்.

வி. கடைசிவருணத்தாராகிய சூத்திரர்கள் கள்ளங் கவடற்றவர்கள். ஆதலால் அவர்களுக்கு மித்திரபேத முதலிய விஷயங்களொன்றுந் தெரியமாட்டாது. மிகுந்தவர்களாகிய வைசியர்களே, இதற்குத் தக்கவர்கள் மஹாராஜா! செட்டி புத்தி கெட்டி, என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா?

நகு. அப்படி செட்டிகளுள் தகுதியானவர்கள் யாராவது நமது நாட்டி லிருக்கிறார்களா ?

வி. அரசே, எனக்குத் தெரிந்தவர்களுக்குள்ளே முன்பு தம் முடைய தகப்பனார் காலத்தில் நவகோடி நாராயண செட்டியார் என்று ஒருவரிருந்ததாகத் தாங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். அவருடைய குமாரர் இப்பொழுது தனபாலசெட்டியார் என்று ஒருவர் இருக்கின்றனர். இவர் மித்திர பேதத்தில் மஹாநிபுணர், இவருடைய தகப்பனாரு மப்படியே; அது பரம்பரையாக வருகிறது. இவரைவிட சாதுர்யமானவர்கள் வேறில்லை மஹாராஜா.

நகு. அப்படியா மிகவுஞ் சந்தோஷம். ஆனால் அந்தச் செட்டியிடஞ் சென்று சந்திரவதனன் புத்திசேனன் ஆகிய இவர்களுடைய நட்பைப் பிரிக்கும்படி நான் கட்டளை யிட்டதாகச் சொல்லும்.

சும. [ஒரு புறமாக] ஆ ! ஜெகதீசா !

வி. ஆம் மஹாராஜா ! அப்படிச் செய்தால் என்ன தருகிறீர் என்று சொல்வது ? ஒரு பலனுமின்றி செட்டியார் செய்வாரா ?

நகு. அதற்கென்ன, அப்படிச்செய்யும் பக்ஷத்தில் பதினாயிரம் பொன் தருவதாக சொல்லும்.

வி. பதினாயிரம் பொன்னா' சரி, ஐயாயிரம் என்று அவருடன் சொல்லுகிறேன், எனக்கு ஐயாயிரம் வேண்டாமா ?

நகு. விதூஷகரே, நான் சொல்லியபடி செய்யும், உமக்கு வேறாக நான் தருகிறேன்.

வி. அப்படியே உத்தரவுபடி. [புறப்படுகிறார்.]

நகு. விதூஷகரே, இப்படி வாரும். ஆனால் இன்னும் ஏழு தினங்களுக்குள்ளாக அவ்வாறு பிரிக்கவேண்டும், இல்லாவிட்டால் சிரச்சேதம் செய்துவிடுவேனென்று சொல்லும்.

வி. சரி சரி ! ஆனால் வேறு யாரையாவது பாரும். வைசிய குலத்தி லுதித்தவர்கள் மிகவுந் தைரியசாலிகளாயிற்றே, இல்லாவிட்டால் சிரச்சேதம் செய்து விடுவாரென்கிற

பேச்சைக் கேட்டவுடன் செட்டியாரை என் கண்முன்பா கக்காண்பதே அரிதாகும். இதற்கு அவர் இசையார்.

நகு. என்ன ! செய்தால் பதினுயிரம் பொன் வரவில்லையோ?

வி. ஓஹோ ! ஆம் ஆம்! பணம் என்ருல் பிணமும் வாயைத் திறக்கும் அல்லவா? அதிலும் செட்டிகளுக்குக் கேட்பானேன்? ஆதலால் முன்பு பதினுயிரம் பொன் ராஜா தருகிருர் என்று கூறி, பின்புமற்றசமாசாரங்களைக் கூறுகிறேன். நான்போய் ஒருகை பார்க்கிறேன். ஆயினும் எனக்கு ஒரு பெரிய சந்தேகம்.

நகு என்ன ?

வி. முன்பே மஹாராஜா, இவ்விஷயத்தை ஒருவரிடமும் வெளியிடலாகாதென்றும் அப்படிச் செய்தால் எங்கள் தலையை வெட்டிவிடுவதாகவும் கூறினீரே, நான் எப்படிச் செட்டியாரிடம் கூறுவது? என் தலைபோகவா ?

நகு. அப்படியன்று, அவரைத் தவிர வேறு யார்க்கும் கூறக் கூடாதென்று மொழிந்தேனே யொழிய வேறன்று; விதூஷகரே, போய்வாரும்.

வி. அப்படியே மஹாராஜா. [விதூஷகர் போகிருர்]

நகு மந்திரி, என்ன முகம் வாடியிருக்கிறீர்? இதற்காக என் மீது வருத்தங்கொள்ள வேண்டாம். எல்லாம் சுபமாகவே முடியும்; நீர் அஞ்சாதீர்.

சும அரசர்க்கரசே, அப்படியே எல்லாம் நன்மையாகவே முடியுமென்று சுவாமியைப் பிரார்த்திக்கிறேன் —[ஒருபுறமாக] நான் நம்பவில்லை.

காட்சி முடிகிறது.

மூன்றாம் காட்சி

இடம்—தனபாலசெட்டி வீட்டில் ஓர் அறை.

தனபாலசெட்டி ஒரு நிருபத்தைப் படித்தவண்ணம் வருகிறான்.

தன. "இந்தக் கள்வர் கூட்டத் தலைவனே என்கையில் அகப்பட்டான்; அவனைப் பயமுறுத்திக் கேட்கும் பொழுது, உண்மையைச் சொல்லிவிட்டான்! இவர்களுடைய முக்கியமானவேலை, சிறு குழந்தைகளைத் திருடிச்சென்று விலையாக்கி வாழ்வதேயாம். பதினொன்கு வருஷங்களுக்கு முன்பாக கலிங்க தேசத்தரசனது பெண்குழந்தையைத் தாங்கள் திருடியதாகவும், அக்குழந்தைக்கு இருகைகளிலும் இரண்டு சிறந்த கடகங்களணிந்திருந்ததாகவும், அவற்றுள் ஒன்று நீக்கக்கூடுமானதாயிருந்தமையால், அதைக் கழற்றிவிற்று விட்டதாகவும், மற்றொன்று அக்குழந்தையின் கையிலேயே கிடக்க, அதனுடன் அக்குழந்தையை, உம்முடைய மனையாள் காணாமற்போன தன் புதல்விக்குப் பதிலாக, வளர்ப்பதற்காக ஆயிரம் பொன் கொடுத்து வாங்கிக்கொண்டதாகவும், இக்கள்வர் தலைவன் கூறினான். அக்கடகத்தை வாங்கினவனிடஞ் சென்று, அதைப் பரிசோதித்துப் பார்த்தேன், இதற்கும் நம்முடைய வீட்டிலிருப்பதற்கும் சற்றேனும் பேதமில்லை. ஆதலால் நம்முடைய வீட்டில் உமது பெண்போல வளரும் புஷ்பவல்லி, கலிங்கதேசத்து மன்னனது புதல்வியென்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை. இவ்வுண்மையை நாம்வெளியிடுவோமாகில் நமக்கு மிகத் தீங்குவிளையுமாதலால் மௌனமாயிருத்தலே நலம். காணாமற்போன உம்முடைய குழந்தையையும் இக்கள்வர்களே திருடிக்கொண்டு போயிருக்கவேண்டும். இதைக் குறித்து நன்றாய் விசாரணைசெய்து பின்பு எழுதுகிறேன்."

இப்படிக்கு
தங்கள் பிரியமுள்ள தம்பி,
லோகநாத செட்டி.

ஆ! ஆ! இப்படித்தா னிருக்கவேண்டுமென்று முன்னமே நான் நினைத்தேன்! இல்லாவிட்டால் லக்ஷ்மியும் நாணும் படியான வடிவழகுள்ள பெண், வைசிய குலத்திலுதித்தல் அசாத்தியமாம். இத்தனைநாள் என் பெண்ணென்று நான் வளர்த்துவந்த புஷ்பவல்லி, கலிங்கதேசத் தரசனுடைய மகளே. இதற்கு முன்பே கையிலுள்ள ரேகைக ளாலும் மற்றைக் குறிகளாலும், இவள் ராஜபுத்திரி யென்றே நினைத்தேன். ஜோதிஷர்கள் புஷ்பவல்லி ஓர் அரசகுமாரனை மணம்புரிவா ளென்று கூறியதினுண்மை இன்றுதான் கண்டேன். என் சொந்தக் குழந்தையா யில்லாமற் போனதினால் என்ன? என்புத்திரியைப்போ லவே இதுவரையில் புஷ்பவல்லியைப் பாராட்டி வந் தேன். புஷ்பவல்லியும் என்னைத் தன் தந்தையாகவே எண்ணியிருக்கிறாள் ஆதலால் இக்கடிதத்தைக் குறித்து புஷ்பவல்லிக்கு நான் ஒன்றுந் தெரிவிக்கலாகாது

புஷ்பவல்லி வருகிறாள்.

புஷ் தந்தையே, என்ன இவ்வளவு காலம் தாழ்ந்தது? போஜனம் கொள்ள வரவில்லையோ?

தன. குழந்தாய், ஒன்றுமில்லை, எனக்கு இன்று இன்னும் பசிக்கவில்லை சற்றுப்பொறுத்து வருகிறேன்.

புஷ். ஐயனே, என்ன உமது முகம் ஒருவாறு தோன்றுகிறது? ஏதோ மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறீர் போலும், ஏதாவது விசேஷமுண்டோ?

தன. புஷ்பவல்லி, விசேஷம் ஒன்றுமில்லை.

புஷ் இல்லை, ஏதோ இருக்கிறது. என்னிடம் அதைச் சொல்லலாகாதா?

தன. குழந்தாய், கண்மணியே, அப்படி விசேஷமிருந்தால் உனக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்லப்போகிறேன்? அப்படி யொன்றுமில்லை.

புஷ். ஆனால் ஏன் உமதுமுகம் ஒருவாறாய்த் தோற்றுகிறது தந்தையே?

தன. ஏதோ இனிமேல் எனக்கு ஒரு பெருந்துயரம் விளையும் போலத் தோற்றுகிறது. அது யாதுகாரணம் பற்றியோ? இதுவே என் மனதில் சற்றுச்சஞ்சலத்தையுண்டுபண்ணு கிறது. எனக்கு இப்பொழுது பசியாயில்லை—ஆதலால் குழந்தாய், என்மனம் சந்தோஷமடையும்படி ஏதாவது சற்றுப் பாடு பார்ப்போம்

புஷ். அப்படியே ஐயனே. [புஷ்பவல்லி தம்புருவை மீட்டி ஒரு. பாட்டைப்பாடுகிறாள்]

தன. மிகவும் நன்றாயிருக்கிறது—குழந்தாய், உனக்கு இப்பொழுது என்ன வயதாகிறது?

புஷ். பதினாறு வயதாகிறது தந்தையே.

தன. என் கண்மணி, உனக்கு விவாகஞ் செய்யவேண்டிய காலம் வந்து விட்டது. சீக்கிரத்தில் உனக்குத் தகுந்த வரனைச் சம்பாதித்து உனக்கு மணஞ்செய்விக்க முயல வேண்டும். ஆயினும் உனது வடிவழகிற்கும் அறிவிற்கும் தக்க புருஷனை நான் எங்கு கண்டுபிடிக்கப்போகிறேன்!

புஷ் ஐயனே, நான் உம்மை வேண்டிக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுளது; எப்படியாயினும் என் மனதிற்கிசையாத புருஷனுக்கு என்னைத் தாங்கள் விவாகஞ்செய்து கொடுக்கலாகாது.

தன. புஷ்பவல்லி, அப்படியே அதற்கென்ன? நீ கோரும்படியான புருஷனையே உனக்குக் கணவனாக விவாகஞ்செய்து வைக்கிறேன். அதைக்குறித்து நீ சந்தேகிக்க வேண்டுவதில்லை

விதூஷகர் வருகிறார்.

விதூ. ஐயா, செட்டியாரே, வந்தனம் தந்தனம்.

தன. ஓஹோ! வாரும், வாரும் ஐயா விதூஷகரே, உட்காரும்.

விதூ. நான் அரசனிடமிருந்து ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி உம்முடன் பேசவந்தேன். இப்படி வாரும் சொல்லுகிறேன்.

தன. என்ன, என்ன விசேஷம்?

விதூ. இப்படி வாருமையா சொல்லுகிறேன்.

[ஒரு புறமாக அவனை அழைத்துச் செல்லுகிறார்.]

புஷ். ஆ! எனது தந்தையார் என் கருத்திற்கிசைந்த கணவனை யே எனக்கு மணம்புரிவிப்பதாக யோசியாது கூறிவிட்டார். நான் காதல்கொண்டிருக்கும் புருஷனை எனக்குக் கணவனாகும் படிச்செய்ய இவரால் முடியுமோ?—

தோழி வருகிறாள்.

தோ. அம்மா புஷ்பவல்லி, ஏன் முகம் வாடி யிருக்கிறாய்?

புஷ். ஒன்றுமில்லை.

தோ. ஒன்றுமில்லையா? இல்லை ஏதோ இருக்கிறது. உன் முகத்தைப் பார்த்தால் யாரோ ஒரு புருஷன் மீது காதல் கொண்டிருக்கிறது போலத் தோற்றுகிறது.

புஷ். நானா காதல்கொண்டிருக்கிறேன்? தோழி, அவ்வாறொன்று மில்லை.

தோ. இல்லை இல்லை அம்மா, ஏன் என்னிடம் ஒளித்துப்பேசுகிறாய்? 'அகத்தினழகு முகத்திலே' என்று உன்முகமே யெல்லாவற்றையும் வெளியாக்குகிறது. நானுன்னிடம் ஏதாவது ஒளித்ததுண்டா? நீயேன் என்னிடம் ஒளிக்கிறாய்?

புஷ். தோழி! முடவன் கொம்புத்தேனுக் காசையுற்றாற்போல, நான் நகுலராஜன் புத்திரராகிய சந்திரவதன ராஜன்மீது காதல் கொண்டிருக்கிறேன். அவரை அன்று நான் கண்டதுமுதல் எந்நேரமும் என்மனதில் அவர் குடிகொண்டிருக்கிறார். அற்பகுலத் துதித்த நான், அரசகுமாரன் மீது காதல் கொள்ளுதல் முறையாமோ? முறையன்றென்று எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபோதிலும் என் மனதை யடக்க என்னால் முடியவில்லையே இதற்கென்ன செய்வது? அம்மஹாபுருஷனை நான் எக்காலதிற் பெறுவேனோ! எல்லாம் கடவுளி னிச்சைப்படியாகிறது.

தோ. அம்மா கடவுளின் கிருபையால் அவரை நீ சீக்கிரம் அடைவாய். நீ வருத்தப்படாதே; போஜனத்திற்குப்போவோம் வா. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது

நான்காவது காட்சி

புத்திசேனன் வருகிறான்.

புத். என்ன இன்னும் பிதா அரண்மனையிலிருந்து வரவில்லை? என்னை, மஹாராஜாவின் சந்நிதானத்தினின்றும் சீக்கிரத்தில் வீட்டிற்குப் போகும்படியாகக் கூறினார், என்ன காரணம் பற்றியோ என்னை அனுப்பித்துவிட்டார்? தெரியவில்லை. தானும் சீக்கிரமாய் மனைக்கு வருவதாகச் சொல்லினார். இன்னும் வரக்காணேன். என்ன விசேஷமோ? எல்லாம் வந்தவுடன் விசாரித்தறிகிறேன்.

சுமந்திரர் வருகிறார்.

ஐயனே, என்ன இவ்வளவு காலதாமசமாயது? முன்பே வருகிறேன் என்றீரே? அரசசபையில் ஏதாவது விசேஷமுண்டோ?

சும. புத்திசேனா, என்னருகில்வா; நான் உன்னுடன் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்துப் பேசப்போகிறேன். கவனமாய்க் கேள்.

புத் அப்படியே ஐயனே, என்ன விசேஷம்?

சும. புத்திசேனா, மகன் தனது தந்தைக்குச் செய்யவேண்டிய முக்கிய கடமை என்ன?

புத். மகன் தந்தைக்குச் செய்யவேண்டியது அவர் சொற்படி நடத்தலே.

சும. தகப்பனுடைய கட்டளையை மீறி மகன் ஒரு காரியஞ் செய்யலாமோ? அல்லது அவர் கட்டளையை மறுக்கலாமோ?

புத். மறுக்கலாகாது. ஒருகாலும் மறுக்கலாகாது; பிதா எவ்வளவு அறிவீனனாயிருந்தபோதிலும், எத்தனை துர்நடக்கை யுடையவனாக விருந்தபோதிலும், அவருடைய ஆக்கினைக்கு மீறிநடக்கலாகாது. தந்தை என்ன செய்யும்படி கூறினும், நன்மையோ, தீமையோ அதைச்செய்து

தான் தீரவேண்டும். பிதா தன் உயிரைக் கேட்டபோதிலும் மகன் கொடுக்கவேண்டியதே.

சும. உனக்கு இவையெல்லாம் நன்ருய்த் தெரியுமல்லவா ?

புத். தெரியும் ஐயனே.

சும. ஆனல், நான் உனக்கு ஒரு கட்டளையிடப் போகிறேன். அதன் பிரகாரம் நீ நடக்கவேண்டும் என்ன சொல்லுகிருய் ?

புத். ஐயனே, நான் என்ன சொல்லுகிறது ? நீர் கட்டளையிட இதுவரையில் ஏதாவது நான் மறுத்ததுண்டோ ? எனதுயிரைக் கேட்டபோதிலும் நான் தரச் சித்தமாயிருக்கிறேன்.

சும. என் கட்டளையை மறுக்கமாட்டாய் அல்லவா ?

புத். மறுக்கமாட்டேன் மறுக்கமாட்டேன். ஏன் இதைப் பலதரம் கூறுகிறீர் ?

சும. ஆனல், புத்திசேனு, இன்று முதல், மூன்று வருஷகாலம், உனது தோழனுகிய இளவரசருடன் நீ பேசலாகாது.—

புத். என்ன சொன்னீர் ! ஐயனே என்ன சொன்னீர் ?

சும. இன்னும் மூன்றுவருஷகாலம் வரையில் நீ சந்திரவதனனுடைய நட்பினின்றும் பிரிநதிருக்க வேண்டியது. அக்காலம் வரையில் இளவரசருடன் நீ ஒரு வார்த்தையும் பேசலாகாது. இதுவே என் கட்டளை.

புத். ஐயோ ! மூன்று வருஷகாலம் என் உயிர் நண்பனுகிய சந்திரவதனனுடன் நான் பேசாதிருக்க வேண்டும்! அவருடைய நட்பினின்றும் நான் பிரிந்திருக்க வேண்டும் ! இதென்ன இது ? நினைவோ கனவோ ? நான் உறங்குகிறேனே அல்லது விழித்திருக்கிறேனே ?

சும. ஜாக்கிரதை, சற்று முன்பாக நீயே கூறியதை மறந்துபோகாதே ! நானே கட்டளையிட்டு விட்டேன், நீங்களிருவரும் பிரிந்துதானிருக்கவேண்டும்.

புத். ஐயோ! இதென்ன் ஆச்சரியமாக இருக்கிறது ! என்ன காரணம் பற்றி இவ்வாறு எங்களைப் பிரிந்திருக்கச் சொல்லுகிறீர் ?

சும. மஹாராஜா உன் மீது மிகவுங் கோபங்கொண்டிருக்கிறார்.

புத். அதற்காகவோ என் உயிர் நண்பனைவிட்டுப் பிரிந்திருக்கும்படி சட்டளை யிடுகிறீர்? மஹாராஜா என்னிடம் என்ன குற்றங்கண்டு கோபங்கொண் டிருக்கிறார்? அப்படி ஏதாவது என்னிடங் குற்றமிருந்தால் நேராகக் கூறலாகாதா? இதற்காகவோ என் நண்பனுடன் நான் வார்த்தையாடா திருக்கவேண்டும்?

சும அதல்ல அதல்ல! நீ என்னை இதற்குக் காரணங் கேட்கலாகாது. நீ என்னுடைய கட்டளைப்படி மூன்றுவருஷகாலம் உன்னுடைய நண்பனைப் பாராமலும் அவனுடன் பேசாமலும் இருக்கிறாயா, மாட்டாயா? என்ன சொல்லுகிறாய்?

புத் ஐயனே! நீர் என்னகேட்கிறீர் என்று அறிகிலீர்போலும்! ஒருநாளும் பிரிந்திராத என் நண்பனைவிட்டு நான் எவ்வாறு மூன்று வருஷகாலம் பிரிந்திருப்பேன்? அவனுடைய மதிபோன்ற முகத்தை ஒரு நாள் காணாவிட்டால் நான் உயிர்வாழ்தலரிதே, அவனுடன் பேசாவிட்டால் எனக்கு ஒருதினமும் செல்லாது, இதற்கு நான் என்ன செய்வேன்?

சும. புத்திசேனா, என்ன, எனது கட்டளையை மறுக்கப்பார்க்கிறாயோ? சற்று முன்பாக மறுக்கமாட்டேன் என்று உறுதியாகக் கூறியதையெல்லாம் மறந்தனையோ?

புத். ஐயனே, உமக்கருளில்லையோ? ஒன்றாய்ப் பிறந்து ஒன்றாய் வளர்ந்து, எக்காலமும் பிரியாதிருக்கும், எம்முடைய நட்பைப் பிரிக்க உமது மனம் என்ன கல்லோ? ஐயோ! எல்லா மறிந்த உமக்கு நான் என்ன சொல்லப்போகிறேன்! இருவருடைய நட்பைப் பிரித்தல் தவறென்றும் அது பெருந்துயரத்திற்கு இடமாகுமென்றும் தர்மசாஸ்திரங்கள் கூறுவதை நீர் மறந்தீரோ? நீர் என்மீது சற்று கருணைபுரிந்து இதைத்தவிரவேறு கட்டளையிட வேண்டுமென்று நான் உம்மை இரந்து வேண்டுகிறேன்

சும. அடே! உமது கட்டளையை மறுக்கமாட்டேன் என்று கூறியது இது தானோ?

புத். ஐயனே! ஐயோ! அவ்வாறல்ல, தாங்கள் கோபிக்கலாகாது, இது தவிரவேறு என்ன வேண்டுமென்றாலும் செய்யச்சித்தமாயிருக்கிறேன்—வேறு ஏதாவது கட்டளையிடுமே? என் உயிரை வேண்டுமென்றாலும் நான் கொடுக்கிறேன், என் நண்பனை விட்டுப் பிரிந்திருக்கும்படியாக மாத்திரம் தாங்கள் எனக்குக் கட்டளையிடலாகாது!

சும. புத்திசேனா! வீணாகப் பேசுவதில் பிரயோஜனமில்லை நீ என்னுடைய குமாரனானால் என் கட்டளைப்படி நடப்பாய்!

புத். ஐயனே! நான் உமது கட்டளையை மீறி நடக்கமாட்டேன் என்பது உமக்குத்தெரிந்த விஷயமே! நீரோ நான் என்ன வேண்டியும் என்னுயிர் நண்பனுடன் மூன்று வருஷகாலம் பேசாமலிருக்கும் படியாகக் கட்டளையிட்டு விட்டீர். நானோ என் நேசனைவிட்டு ஒரு நாளும் பிரிந்திருக்கமாட்டேன். இச்சங்கடத்தினின்றும் கடைத்தேறுவதற்கு ஒரே மார்க்கமுண்டு—அது நான் இறத்தலே தற்கொலை மிகவுங்கொடியது என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆதலால், ஐயனே, அந்தத் தீமையும் என்னை வந்தணுகாதபடி, நீரே, இதோ என்னுடைய வாளினால், ஒரே வெட்டாக வெட்டிவிடும். நானோ இறக்கப் போகிறேன், உம்முடைய கையினால் இறந்தால் எனக்குச் சிறிது புண்ணியமுண்டு.

சும இதென்ன! புத்திசேனா! அறிவீனனாயிருக்கிறாய்! என் கையால் உன்னை வெட்டுவது? சீ! விடு வாளை! ஆ! உங்களிருவருடைய நட்பு என்ன அவ்வளவு அன்யோன்ய மானதா? ஒருவரை விட்டொருவர் ஒரு நாளும் பிரிந்திருக்க மாட்டீரா?

புத். பிரிந்திருக்க மாட்டோம்.

சும. பிரிந்தால் உயிர்போய் விடுமோ?

புத். ஆம்! எங்களுடைய உயிர் நீங்கிவிடும்.

சும. இது உண்மைதானா?

புத். உண்மைதான்.

சும. சற்றேனும் சந்தேகமில்லையா ?

புத். இல்லை இல்லை. பிதா! இதென்ன பலமுறை உண்மை தானு உண்மைதானு என்று கேட்கிறீர் ? நான் இதுவரை யில் ஏதாவது தங்களிடத்திலாவது மற்று யாரிடத்திலா வது பொய்யுரைத்த துண்டோ? அப்படி யிருக்கத் தாங்கள் பன்னிப் பன்னி நான் கூறியது மெய்தானு வென்று வினவுவதற்குக் காரணமென்னே ?

சும. அப்படியா ! உங்களுடைய நட்பின் திறத்தை நான் அறி கிறேன் ! புத்திசேனு, ஒரு காலம்வரும், அப்பொழுது நான் உன்னைக் கேட்பேன். அக்காலத்தில் நீ இப்பொ ழுது கூறியதைக் கூறவேண்டும், தெரியுமா ?

புத். தந்தையே, அப்படியே.

சும. மறந்துவிடப் போகிருய், ஜாக்கிரதை!

புத். மறக்கமாட்டேன்! ஐயனே, என் வேண்டுகோளுக் கிரங்கி முன்பிட்ட கட்டளையை மீட்டுக்கொண்டதற்காக நான் உமக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? நான் போய் வருகிறேன். [போகிருன்.]

சும. இவன் அறியாப் பாலகன். இவனுக் கென்ன தெரியும்? அரசரால் ஏவப்பட்ட அக்கொடிய செட்டியோ, எப் பேர்ப்பட்டவர்களது மனதையுங் கலக்கவல்லவன். எப் படியும் அவனது வலையில் அகப்படுவான் என்பதற் கையமில்லை. இவன் மிகவும் மானமுடையவன், ஆதலால் தன் நண்பனிடமிருந்து பிரிக்கப்பட்டாலோ பிறகு உயிர் வாழான். அப்பெரும் பாவிக்கு இரையாகப் போகிருன். ஈசனே ! இதுவும் எனக்கு விதித்த விதியோ ? அப்பா ! புத்திசேனு ! என் அருமைக்கிளியே ! நான் உன்னை இப் பாதகர்களுக்கு இரையாகக் கொடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. நீயோ இறக்கப்போகிருய். அதைப் பார்த்து நான் எவ்வாறு உயிர்வாழ்வேன் ?

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி

இடம்—தனபாலசெட்டி வீட்டில் ஓர் அறை.

தனபாலசெட்டி வருத்தத்துடன் உட்கார்ந்துகொண்டிருக்கிறான்.

தன. ஐயோ! இவ்வுலகத்தில் என்னுடைய வாழ்வு இன்னும் ஒரு நாள் தானே! ஆஹா! இவர்களுடைய நட்பை நான் என்னென்று சொல்வது? சிநேகங்கொண்டால் இப்படியல்லவோ இருக்க வேண்டும்! இந்த ஆறுதினங்களாக நான் என்னால் கூடியமட்டும் முயன்றும் இவர்களுடைய மனதைக்கலக்க என்னால் முடியாமற் போனதல்லவா? ஆ! இவர்களுடைய நேசமே நேசம்! நான் இத்தொழிலிற் சிறந்தவன் என்று பெயர் பெற்றிருந்த தெல்லாம் எதற்காயது? இனி பிரயோஜனமில்லை, நான் நாளைத்தினம் இறக்கவேண்டியது தான். இந்த ஆறுநாட்களாகச் செய்து பார்க்காததா இனிமேல் செய்யப் போகிறேன்? நான் இதுவரையில் கற்ற வித்தைகளெல்லாம் பயனில்லாமற் போயினவே. ஒருவரைவிட் டொருவரைப் பிரித்து, ஏகாந்தமா யழைத்துச்சென்று, எவ்வளவோ போதித்துப்பார்த்தேன், மனதைப் பேதித்துப் பார்த்தேன் அதிகமாகச் சொல்வானேன்? இதுவரையில் நான் செய்யாத சூழ்ச்சிகளை யெல்லாம் செய்து பார்த்தேன்; சற்றேனும் இந்த இரண்டு நண்பர்களுடைய மனம் வேறுபட்டதா? இல்லையே! நானல்ல, இவர்களுடைய நட்பை மும்மூர்த்திகளாலும், பிரிக்க முடியாது. இனி பேசி என்னபிரயோஜனம்? நான் நாளைத்தினம் அரசனது ஆக்கினைக் குட்படவேண்டியது தான்—வேறுவழியைக் காணேன். ஹா!

விதூஷகர் வருகிறார்.

விதூ. ஐயா செட்டியாரே, என்ன விசேஷம்? ஐயோ பாவம்! காதுகூட கேட்கவில்லை—என்ன செய்கிறது!

தன. ஓஹோ! நீரா? வாரும் விதூஷகரே, என்ன விசேஷம்?

விதூ. ஒன்றுமில்லை, நான் திருவிடைமருதூருக்குப் போகலாமென்றிருந்தேன், இனி நான் போக வேண்டியதில்லை. இதோ நேராகக் கண்டு விட்டேனும்மை.

தன. என்னைக் காண்பதற்கோ அங்குப் போகலாமென்றிருந்தீர்?

விதூ. அப்படியல்ல அங்கே ஆலயத்தில் கோபுரவாயிலில் ஒரு மஹானுபாவர் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்.—தாங்களும் கேட்டிருக்கலாம், திருவிடைமருதூர் சோழப் பிரம்மஹத்தி என்று—அவரைக் காணவே போகவேண்டுமென்றிருந்தேன்—உம்மையே யிப்பொழுது நேராகக் கண்டுவிட்டேனே, இனி அங்கே ஏன் போகவேண்டும்?

தன. ஐயா! இப்பொழுது விளையாடுவதற்குக் காலமோ?

விதூ. அது இருக்கட்டும், என்ன விசேஷம்? உம்முடைய முகத்தில் தேஜஸ் ஜொலிக்கிறதே!

தன. ஐயா, நீர் அறியாத விசேஷமோ? இப்பொழுது உம்முடன் பேசிக்கொண்டிருக்கும்படியான நான், நாளைத் தினம் இவ்வேளையில் மண்ணாயிருப்பேன.

விதூ அதற்கு நீங்கள் பயப்படவேண்டாம். நான் உம்மை ஒரு பெட்டியில் அடக்கஞ் செய்யும்படிக் கட்டளையிடுகிறேன். அப்பொழுது மண்ணாவதற்கு இரண்டு மூன்று வருஷங்கள் செல்லும். அது கிடக்கட்டும், ஏன் அப்படி?

தன. விதூஷகரே, நீர் ஒன்றுந் தெரியாதவர் போலக் கேட்கிறீரே. நான் சென்ற குருவாரம் பதினாயிரம் பொன்னுக்காக, இளவரசர் புத்திசேனன் இவர்களது நட்பை, ஏழு தினங்களுக்குள்ளாகக் கலைப்பதாக ஏற்றுக் கொண்டேனன்றோ? இன்றைக்கு ஆறுதினங்களாய்விட்டன. அவர்களது நட்பைப் பிரித்தல், தேவராலும் அசாத்தியமென்று இன்றோடே விட்டுவிட்டேன், ஆதலால் நாளைக்கு அரசரது ஆக்ஞைக்கு ஆளாகத்தான் வேண்டும். அதற்காகவே வருத்தப்படுகிறேன்.

விதூ. அதற்காக வருத்தப்படுவானேன்?

தன. என்ன, இத்துயரத்தினின்றும் கரையேறுவதற்கு ஏதாவது வழியுண்டோ?

விதூ. என்ன ஐயா இது? இதற்காகவா வருத்தப்படவேண்டும்? அரைநிமிஷத்து வேலை. வெட்டு ஒன்று துண்டு இரண்டு, அவ்வளவே. அப்புறம் பேச்சேயில்லை.

தன. இவ்வளவு தானோ?

விதூ. வேறென்ன இருக்கிறது? இனிமேல் என்னசெய்வது?

தன. ஆம்! இனி என்ன செய்வது? உரலுக்குள் தலையை நுழைத்துக்கொண்டு உலக்கைக்குப் பயந்தாலாகுமா? நான் சிரசாக்கினைக் குட்பட வேண்டியதுதான். ஆ! இவ்வளவு துயரமும் பதினாயிரம் பொன்னுக்கு நாணைகொண்ட திறலல்லவா?

விதூ. ஆம் ஆம், அதைக் கேட்கத்தான் நானும் வந்தேன். ஏனையா உமக்குப் பணமில்லாமலா போயது? அப்படி இருக்க, இப்பதினாயிரம் பொன்னுக்கு ஆசைப்படுவானேன், அப்புறம் அழுவானேன்?

தன. ஐயா, விதூஷகரே நான் மதிமோசம் போனேன். வீணாகப் பொருளுக் காசைப்பட்டல்லவோ இப்பெருந்துயருக்குள்ளாயினேன்? இச் செல்வத்தினால் இப்பொழுது எனக்கு என்னபயன்? நாளைக்கு இவைகளென்னுடன் வரப் போகின்றனவா?

விதூ ஏனையா! அதென்ன, நீர் பரலோகஞ் செல்லும் பொழுது உம்முடன் இவைகளை யெடுத்துக்கொண்டு போகலாகாதோ?

தன. இப்பொழுது வேடிக்கையாகப் பேசுவதற்குக் காலம் அல்ல விதூஷகரே, இந்தப் பிராண சங்கடத்தினின்றும் நீங்க வழியுளதாயின் சொல்லும்.

விதூ. செட்டியாரே, என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு ஒரு வழியுந் தோற்றவில்லை.

தன. ஆம்! என்னவழி இருக்கிறது? இறப்பதேயாம்.

புஷ்பவல்லி வருகிருள்.

புஷ். தந்தையே, சாப்பிட வருவதற்கு இன்று இவ்வளவு காலம் தாமசம் ஏன்?—என்ன முகம் இவ்வாறு வாடியிருக்கிறதே! இவ்வாறு ஒருநாளும் இருந்ததில்லையே! என்ன விசேஷம்.?

தன. ஒன்று மில்லை.

புஷ். இல்லை ஏதோயிருக்கிறது! ஐயா விதூஷகரே, நீராவது சொல்லலாகாதா? என்னுடைய பிதா இவ்வாறு வருந்தியிருக்க நான் கண்டு எவ்வாறு சகிப்பேன்?

விதூ. ஒன்றுமில்லை, அம்மணி.

புஷ். இல்லை இல்லை, ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது. தந்தையே—இதென்ன! ஓஹோ! ஒருநாளும் வாடாத உம் முகத்தினின்றும் கண்ணீர் தாரை தாரையாய் வருவதற்குக்காரணம் என்ன? எனக்கு எப்படியுந் தெரிவிக்க வேண்டும். என்னிடத்தில் சொல்லலாகாதா? நீர் தேம்பித் தேம்பி அழ நான் பார்த்துக்கொண்டிருப்பேனு?

தன. குழந்தாய், அதைரியப்படாதே! ஒன்றும் விசேஷம் இல்லை.

புஷ். நீங்கள் உள்ளதைக் கூறுவிட்டால் நான் இந்த இடத்தை விட்டுப் பெயரேன். நீர் அழும்படியாக வந்த காரணம் ஏதோ முக்கியமானதாகவே இருக்கவேண்டும். எனக்கு அதைக் கூறுவிட்டால் நான் இங்கே எனதுயிரை மாய்த்துக் கொள்வேன்.

தன. பெண்ணே! உன்னிடத்தில என் குறையைக் கூறிப் பிரயோஜன மென்ன?

புஷ். இல்லை எப்படியுங் கூறவேண்டும். அத்துயரத்தை நான எப்படியுந தீர்த்துவிடுவேன்.

தன. நீயோ தீர்க்கப்போகிருய்? விதூஷகரே, இந்த அறியாக் குழந்தையுடன் இந்த வியசனத்தைக் கூறி என்னபயன்?

விதூ. அப்படியல்ல, செட்டியாரே, சொல்லிப்பாரும். இவ்வளவு உறுதியாகக் கூறும்பொழுது ஏதாவதிருக்கும்.

தன. ஆ! ஆ! என் கண்மணியே! நான் நாளைத்தினம் இறக்க வேண்டும்.

புஷ். என்ன! என்ன! நீரா இறக்கவேண்டும்? நீர் உயிர் நீங்க நான் பார்த்திருப்பேனோ? அப்படி ஒருகாலும் வாராது.

தன. சற்றுப்பொறு, அவசரப்படாதே. நீ சொல்லிவிட்டால் ஆகிவிடுமோ? நான் ஏழுதினங்களுக்குள்ளாக சந்திரவதனராஜன் புத்திசேனன் இவர்களுடைய நட்பைப் பிரிப்பதாக, பதினாயிரம் பொன்னுக்காக ஒப்புக்கொண்டேன். இன்றைக்கு ஆறுதினங்களாயின. நான் என்னால் கூடிய மட்டும் யத்தனித்தும் பிரயோஜனமில்லாமற்போய்விட்டது. அவர்களுடைய சிநேகத்தைத் திரிமூர்த்திகளாலும் பிரிக்க முடியாது. ஆதலால் அரசரது கட்டளைப்படி என் தலையை நான் நாளைத்தினம் இழக்க வேண்டியது தான்!

புஷ். தந்தையே, இதற்காகவோ நீர் வருந்துகிறீர்? நீர் சற்றும் வருந்தவேண்டாம். நீர் உள்ளே வந்து போஜனம் கொள்ளும். இதோ ஒரு க்ஷணப்போதில் அவர்களுடைய நட்பை நான் பிரித்து விடுகிறேன். இவ்வளவு தானோ? இதற்காகவா தாங்கள் கண்ணீர் விட்டழவேண்டும்? அண்ணா, போஜனங்கொள்ளவாரும்.

தன. ஆ! மித்திரபேதத்தில் சிறந்தவன் என்று பெயர்பெற்ற நானே ஆறுதினங்களாக என்னாலியன்ற அளவு பிரயத்தனஞ் செய்தும் முடியாமற்போன காரியம், ஒரு பேதையாகிய உன்னால் ஒரு க்ஷணப்பொழுதில் முடியப்போகிறதா? மிகவும் நன்றாயிருக்கிறது!

புஷ். தந்தையே நானிதுவரையில் ஏதாவது செய்கிறேனென்றுரைத்துத்தவறியதுண்டா? என் வார்த்தையை நம்பும். இதோ சென்று அவர்களுடைய இணைபிரியா நட்பைப் பிரித்து விடுகிறேன்.

விது. செட்டியாரே, நான் முன்பே கூறினேனே. ஸ்திரீகளுடைய மனதையும் செயல்களையும் யாரறிவார்? அந்தக்

கைவரிசை உமக்குத் தெரியுமா? போய்வாரும், ஏதாவதிருக்கும்.

தன. என்னாலாகாத இக்காரியம் ஒரு சிறு பெண் குழந்தையாலோ முடியப்போகிறது?

விதூ. அப்படியல்ல செட்டியாரே, சம்சாரத்திலிருக்கும்படியான உமக்கென்ன தெரியும் ஸ்திரீகளுடைய செய்கைகள்? பிரம்மசாரியாகிய எனக்கல்லவோ தெரியும்.

தன. ஏதோ! பார்க்கிறேன். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

ஆறும் காட்சி

இடம்—செட்டிவீதியில் ஓர் மாளிகை.

உப்பரிகையின்மீது புஷ்பவல்லி வருகிறாள்.

புஷ். பொழுது சென்று விட்டது. இன்றைத்தினம் கழிவதன் முன் ராஜகுமாரன் மந்திரி குமாரன் இவ்விருவர்களுடைய நட்பை எவ்வாறாவது நான் பிரித்துவிடவேண்டும்: இல்லாவிட்டால் என தருமைத்தந்தை நாளைக்கு இறக்கும் படியாக நேரிடும். ஆயினும்—சீ! சீ! இதென்ன அற்பத்தொழில்! இரண்டு அந்யோன்யமான தோழரைப் பிரிக்கும்படியான இழிந்த தொழில் எனக்கு வாய்த்ததல்லவா? இத்தொழில் வேசிகட்கே தக்கதாம். ஆயினும் நான் என் செய்வது? இல்லாவிட்டால் தந்தையினுடைய உயிர்போம். தந்தைக்காக நான் என்ன செய்தபோதிலும் அது தவறாகாது. ஆனபோதிலும் ஒரு விஷயத்தில் மாத்திரம் இத்தொழில் எனக்குச் சந்தோஷத்தைத் தரத்தக்கதே. இந்தச் சந்தர்ப்பத்திலாவது எனது காதலராகிய இளவரசரைப் பார்க்கும்படியாக நேரிடுகிற தல்லவா? நானவரை மணம்புரிவது அசாத்தியமான காரியமாக விருந்தபோதிலும், அவருடைய அழகிய

மேனியை என் கண்ணினுற் கண்டு நான் ஆநந்திக்கிறேன்.—

தோழி கிழேவருகிருள்.

தோ. அம்மா, ராஜகுமாரரும் மந்திரிகுமாரரும் இந்த வழியாக நடந்து வருகிருர்கள்.

புஷ். அப்படியா! கும்பிடப்போன தெய்வங் குறுக்கே வந்தது போல நமக்கு இப்பொழுது மிகவும் அனுகூலமாயிற்று. நான் சற்று என்குரலை யெடுத்துப்பாடுவேனுயின் அதைக் கேட்டு இங்கு அருகே வருவார்கள். அப்புறம் என தெண்ணத்தை நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

[பாடுகிருள்.]

இதென்ன இன்னும் குமாரர்களைக் காணும்?—இல்லை இல்லை, அதோ வருகிருர்கள், இதுதான் சமயம்.

சந்திரவதனன், புத்திசேனன் வருகிருர்கள்.

சந். தோழனே, இது என்ன வீதி? இந்தத் தெருவிலிருக்கும் படியான மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் போல மற்றெந்த வீதியுலு மில்லையே ?

புத். இதுதான் வணிகர் வசிக்கும்படியான வீதி.

சந். அப்படியா ? இவ் வீதியை நான் இதுவரையிலுங் கண்டதேயில்லை. நம்முடைய நாட்டில் இவ்வளவு அலங்காரமான வீதியிருக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

புத். ஐயனே, சாதாரணமாக வாணிபஞ் செய்வோர் மிகவுந் தனவந்தர்களாகவே இருப்பார்கள். அவர்கள் வசிக்குந் தெரு மிகவும் அழகாயிருப்பதைக் குறித்து வினவுவானேன் ?

சந். ஆயின் நண்பனே, நாம் உள்ளே சென்று இவ்வீதியின் அலங்காரங்களைக் கண்டு வருவோம் வாராய்.

புத் இளவரசே, காலமாய் விட்டது. நாம் பார்க்கவேண்டிய ரமணீயமான இடங்கள் இன்னும் அநேக மிருக்கின்றன. இங்குநாம் காலத்தைப் போக்கிக்கொண் டிருப்போமாயின், பொழுது போய்விடும்; நாம் போவோம் வாரும்.

சங். புத்திசேனா, நான் இதுவரையில் இவ்வீதியைப் பார்த்ததேயில்லை. இதைப் பார்த்துவிட்டுத்தான் இன்று நாம் வேறிடத்திற்குச் செல்லவேண்டும் வா. [கொஞ்சம் தூரம் நடந்து] ஆ. தோழனே! அந்தக் குரலைக்கேட்டாயோ? எவ்வளவு மனதுக்கு இனிமையாக இருக்கிறது! இது ஒரு பெண்குரலாகவே யிருக்கவேண்டும். இவ்வளவு ரம்யமாக பாடும்படியான ஸ்திரீ எவ்வளவு அழகாக இருக்கவேண்டும்? நாம் இன்னுஞ் சென்று அறிந்து வருவோம் வாராய்.

புத். நண்பனே, இதென்ன விது? வீடுகளென்றால் ஸ்திரீகள் இருப்பார்கள், அப்படி ஸ்திரீகள் யாராவது பாடினால் நாம் அங்கு சென்று, யார் பாடுகிறது, என்ன விஷயம் என்று விசாரித்தல் முறைமையன்று, நியாயமுமல்ல, நமக்கேற்றதல்ல, நாம் திரும்பிச் செல்வோம் வாரும்.

சங் அப்படியல்ல புத்திசேனா, யார் இவ்வளவு இனிமையாகப் பாடுகிறதென்று பார்த்துவிட்டுத் திரும்பி விடுவோம். நாமென்ன ஏதாவது கெட்ட எண்ணங்கொண்டு போகிறோமோ? சும்மா பார்த்துவிட்டு வருவதில் என்னகுற்றம்? [அருகிற்சென்று] ஆ! ஆ! தோழா! முன்பே இப்படிததானிருக்கவேண்டு மென்று நினைத்தேன். அதோ அப்பெரிய மாளிகையின் மேல்மாடத்தில் உட்கார்ந்து பாடுகிற பெண்ணைப் பார்த்தாயோ? அவள் கன்னிகையாகவே யிருக்கவேண்டும். இவ்வளவு ரூபவதியான ஒரு பெண்ணை நான் இதுவரையில் கண்டதேயில்லை. இவளுடைய வனப்பை நான் என்னென்று சொல்வேன்? இப்பெண் யாராக விருக்கலாம்?

புத். ஐயனே, நான் முன்பே கூறினேனே! இது என்ன சங்கடம்? யாராயிருநதாலும் நமக்கென்ன? ஒரு செட்டியின் குமாரத்தியாகத்தான் இருக்கவேண்டும். நாம் போவோம் வாரும்.

சங். ஓஹோ! நண்பனே! உனக்கு ஒன்றும் தெரியாது. இவளுடைய சுந்தரத்தை நோக்குமிடத்து ராஜகுமாரியாகவே

5

தோற்றுகிறது. ராஜகுமாரி யல்லளாயின் தேவ கன்னிகையாயிருக்கவேண்டும். வைசியகுலத்தில் இவ்வளவழகு வாய்த்தபெண் பிறப்பாளோ?—புத்திசேனு, இதென்ன ஆச்சரியம்? அப்பெண் உன்னைக் கூப்பிடுகிருள் போலத் தோன்றுகிறது! உன்னையோ அல்லது, என்னையோ?

புத். இதென்ன! நீர் மனேப்பிராந்தி கொண்டிருக்கிறாற் போலிருக்கிறது. யாரையுங் கூப்பிடவில்லை—நாம் போவோம்.

சங். நான் என்ன பொய்யுரைக்கிறேனே? அதோ நீயே பார்! உன்னைத்தான் அக்கன்னிகை கூப்பிடுகிறாற் போல் இருக்கிறது.

புத். இல்லை இல்லை, வீட்டில் யாரையோ அழைக்கிருள்போலிருக்கிறது.

சங். நண்பனே, நீ ஏதோ காரணங்கொண்டு என்னை இவ்வாறு ஏமாற்றப் பார்க்கிருய் போலும். இல்லை, நீ யுள்ளே சென்று அவள் அழைப்பதற்குக் காரணம் என்னவென்று அறிந்துதான் வரவேண்டும்.

புத். ஐயனே, நான் முன்பே கூறினேனே! இதென்ன கஷ்டகாலமாயிருக்கிறது! யாரோ பெண்பிள்ளை யழைத்தால் நாம் உள்ளே செல்வது நியாயமல்ல.

சங். ஓ! உன் நியாயமெல்லாம் எனக்கு நன்ருய்த் தெரியுமே! என்னை யழைத்திருந்தால் ஒருக்ஷணப்போதில் சென்றிருப்பேனே! இப்பொழுது நீ போகிருயா? நான் போகட்டுமா?

புத். ஐயோ! இதென்ன சங்கடம்! அரசே, நான் போய்வருகிறேன். நீர் இங்குதானே சற்றிரும், நான் உள்ளே சென்று எல்லாவற்றையும் விசாரித்துவந்து உமக்குச் சொல்லுகிறேன். [ஒரு புறமாக] இதுவும் நன்மைதான், அந்த மட்டும் தான் போகிறேனென்றது என்னை யனுப்பிவைத்தாரே.

[புத்திசேனன் உள்ளே சென்று, மேல் உப்பரிகையில் வருகிருன்.]

புஷ். வாரும், உட்காரும்.

புத். பெண்ணே நீ யார்? ஏன் என்னை யழைத்தாய்?

புஷ். நான் தனபால செட்டியாருடைய மகள். யாரோ இரண்டு ராஜகுமாரர்களைப்போலத் தோற்றுகிறதே, இவர்கள் பாதசாரிகளாக இவ்வழியில் செல்வானேன்? சற்று உள்ளே வந்து தங்கியிளைப்பாறி, பின்பு செல்லலாகாதாவென்று கேட்பதற்கே யழைத்தேன்.

புத். இதற்கோ என்னை யழைத்தாய்? உன்னைப்பார்த்தால் கன்னிகையைப்போல் தோற்றுகிறது. நீ பெண்பாலாக விருந்து, வீதியிற் செல்லும் என்னை யழைத்தது மிகவும் தவறு, இனி இவ்வாறு நீ செய்யலாகாது. செய்தால் உனக்குத்தகுந்த சிக்ஷை விதிக்கும்படி கட்டளையிடுவேன், ஜாக்கிரதை.

புஷ். தாங்கள் என்மீது கோபங்கொள்ளலாகாது, ஏதோ நடந்து வந்ததினால் வருந்தி யிருக்கிறீர்களே, சற்றுச் சிரமபரிகாரமாக உட்கார்ந்திருந்து விட்டுப்போனால், நலமாமே யென்றழைத்தேனே யொழிய வேறொன்று மில்லை.

புத். இவ்வளவுதானோ? நான் கூறியது ஞாபக மிருக்கட்டும். நான்போய் வருகிறேன்.

புஷ். தாங்கள் சற்று தாம்பூலந்தரித்துக்கொண்டு பிறகு போகலாமே?

புத். இல்லை இல்லை! எனது நண்பர் வீதியில் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். நான் சீக்கிரம் போகவேண்டும்.

புஷ். நான்—உம்மிடத்தில்-ஒரு சமாசாரஞ் சொல்லவேண்டும்.

புத். என்ன சீக்கிரம் சொல்.

புஷ். [அவன் காதருகிற்சென்று] ஓ!—ஏதோ ஞாபகம் வந்தது—இதற்குள்ளாக மறந்துவிட்டேன்—என்னை மன்னிக்கவேண்டும்—ஒன்றுமில்லை.

புத். இதென்ன! விளையாட்டோ? பத்திரம்!—நான் வருகிறேன்.

சங். ஓஹோ! நான் நினைத்த வண்ணமே யிருக்கிறது. புத்திசேனன் உட்கார்ந்துக் கொண்டான். ஏதோ இருவரும் மிகவும் அந்யோன்யமாகவே பேசுகிறார்கள். இவர்களி

ருவருக்கும் முன்பே யேதோ பழக்கமிருந்திருக்க வேண்டும்—ஆம், இப்பொழுது தெரிகிறது. இதற்காகத்தான் நமது நண்பன் இங்குச் செல்ல வேண்டாம், வேறிடங்களுக்குச் செல்லலாம், என்று என்னை அவ்வளவு பலவந்தப்படுத்தினான். இவர்கள் பேசிக்கொள்வது ஒன்றும் செவிக்கு எட்டவில்லையே!—என்ன! தாம்பூலம்!—ஓஹோ தாம்பூலந் தரித்துக்கொள்ளும் படியாகக் கேட்கிறாள் போலிருக்கிறது. முன்பே பழக்கமில்லாவிட்டால் அப்பெண் இவ்வாறு கேட்பாளோ ?—ஏதோ, காதில்சொல்லுகிறாள் !—இரகசியம் போலும்—எல்லாம் நமது நண்பன் வந்தவுடன் கேட்கிறேன். எனது பிராணநேசன் என்னிடங் கூறாது மற்றுயாரிடம கூறப்போகிறான் ? என்னிடம் அவன் ஒன்றும் ஒளியான்.

[புத்திசேனன் கீழே இழிந்து வருகிறான்.]

தோழனே, என்ன சமாசாரம்?

புத். ஒன்றுமில்லை. அப்பெண் தனபாலசெட்டியின் மகளாம். நாமிருவரும் இவ்வழியாகக் காலால் நடந்து செல்வதைக் கண்டு, ராஜகுமாரர்கள் போல் காண்கிறதே, இவர்கள் காலால் நடந்து இவ்வேளையில் போவானேன் ? ஏதோ களைத்திருக்கிறார்கள், சற்றுசிரம பரிஹாரமாக வீட்டினுள்ளே வந்திருந்து போகும்படிக் கேட்கலாம் என்றே, என்னை அழைத்தனளாம். அவ்வளவுதான், வேறொன்றுமில்லை. நெடுநேரமாகிவிட்டது. நாம் சீக்கிரம் போவோம் வாரும்.

சங். ஆ! ஆ! புத்திசேனா. இவ்வளவுதானோ ?

புத். இவ்வளவே, வேறொன்று மில்லை—நேரமாகிறது.

சங். அதிருக்கட்டும், இப்பெண்ணை உனக்கு முன்பே தெரியுமோ ?

புத். தெரியாது, நமது தனபால செட்டியிருக்கிறாரே, அவருடைய மகளென்று இப்பொழுதுதா னறிந்தேன். என்னை இவ்வாறு அழைத்தற் காக நான் மிகவுங் கடிந்து கொண்டேன்.

சங். நண்பனே, உண்மையில் உனக்கும் இப்பெண்ணிற்கும் சற்றேனும் பழக்கமில்லையா?

புத். ஐயனே, உண்மையில் இக்கன்னிகையை இதற்கு முன்பாக நான் கண்டதேயில்லை!

சங். புத்திசேனா! பொய்யுரைத்தாலும் பொருந்த உரைத்தல் வேண்டும். தெருவில் நடந்துகொண்டிருக்கும்படியான உன்னை, உப்பரிகையின் மீதினின்றும் ஒருஸ்திரீ, முன்பு பழக்கமில்லாவிட்டால் கையால் சைகைசெய்தழைப்பாளோ? அதிலும் கன்னிகை, யௌவன முடையவள் சிறந்த ரூபவதி. இப்படிக்கிருக்க, உன்னை அழைத்து ஆசனத்திலுட்காரவைத்து, மிகவும் அந்யோன்யமாய் வார்த்தையாடி, இவ்வளவெல்லாம் செய்த ஒரு பெண்ணை, நான் இதற்கு முன்பாக அறியேன் என்றால் எவனாவது நம்புவானா? இதென்ன முழுப்பூசனிக்காயை சோற்றோடு மறைக்கலாமா? தாம்பூலங்கூடத் தரித்துக் கொள்ளும்படியாகக் கேட்டாற்போலிருக்கிறது!

புத். நண்பனே, அதுமாத்திரம் வாஸ்தவமே! ஆயினும் அரசே, இப்பெண்ணை இதற்கு முன் நான் கனவிலுங் கண்டதில்லையே! இதென்ன சங்கடமாக விருக்கிறது? இதற்காகத்தான் நான் அப்பொழுதே இங்கு வரலாகாது அரண்மனைக்குச் செல்வோமென்றேன்.

சங். ஆம் ஆம்! உண்மையே, இதற்காகவே இங்குவரவேண்டாமென்று நீ முன்பே கூறினாய். நண்பனே, உண்மையைக் கூறினால் நானென்ன உன்மீது கோபித்துக் கொள்ளப் போகிறேனா? அப்பெண்ணிடம் நீ முன்பே நேசங் கொண்டிருந்தால் அதற்காக நான் உன்னை வெறுப்பேனா? உன்னுடைய சுகமெல்லாம் என்னுடைய சுகமேயாம் நான் இதுவரையில் உன்னிடம் ஏதாவதொளித்ததுண்டா? அப்படியிருக்க, நீயேன் ஒரு அற்பவிஷயத்திற்காக என்னிடம் உண்மையையொளித்துப் பொய்யுரைக்கிறாய்?

புத். ஐயோ! இதென்ன தௌர்ப்பாக்கியம்! நேசனே! உம்மிடம் இதுவரையிலும் நான் ஏதாவது பொய்யுரைத்ததுண்டா? நாமிருவரும் ஒன்றாய்ப்பிறந்து ஒன்றாய் வளர்ந்து இணைபிரியாது வந்தோமே, நான் இதுவரையில் ஒருபொய்யாவது விளையாட்டுக் காகவாவது உரைத்ததில்லை யென்று உமக்குத் தெரியாதோ? ஒரு அற்ப ஸ்திரீ விஷயமாக நான் என்னுயிர் நேயனிடம் அசத்தியம் புகல்வேனோ?

சங். தோழா, அதெல்லாமிருக்கட்டும். மனிதன் என்றால் எவ்வளவோ இருக்கும்; அவைகளையெல்லாங் கேட்பது நியாயமல்ல. நீ என்னுடன் சொல்ல வெட்கப்படுகிறாற் போலிருக்கிறது; கிடக்கட்டும், ஆயினும் ஒரு விஷயம் மாத்திரம் உன்னைக் கேட்கிறேன். உண்மையைக் கூறிவிடவேண்டும்—கடைசியில் அச்செட்டிப் பெண் உன் காதருகில் வந்து ஏதோ இரகசியம் கூறினாளே, அதை மாத்திரம் சொல்லிவிடு. உடனே நாம் திரும்பி அரண்மனைக்குப் போவோம். நேரமாய்விட்டது.

புத் [ஒருபுறமாக] இதுவரையில் நான் கூறியதையெல்லாம் நம்பாதவர் இதை நம்பப்போகிறாரோ? இதுவும் என்தலைவிதிதான்—ஐயனே, வேறொன்றுமில்லை தான் ஏதோ முக்கியமான விஷயம் சொல்லவந்ததாகவும், அதை உடனே மறந்து விட்டதாகவும், கூறினாள். அவ்வளவேயொழிய வேறொன்றுமில்லை.

சங். புத்திசேனா! நான் எவ்வளவு கூறியும் பொய்யுரைக்கிறாயல்லவா? என்னடா, ஒரு பெண் ஒரு நிமிஷத்திற்குள்ளாக ஏதோ சொல்லவந்ததாகவும், அதை உடனே மறந்து விட்டதாகவும், கூறுவாளோ? என்ன, என்னை பயித்தியக் காரனென்று நினைத்து விட்டாயோ? உண்மையைக்கூறி விடு. நான் உன்னிடம் எப்பேர்ப்பட்ட இரகசியமாக இருந்தபோதிலும் கூறவில்லையா? இதை ஏன் ஒளிக்கிறாய்?

புத். இளவரசே! நான் என்ன சொல்லப்போகிறேன்! ஏனோ என்மீது உமக்கு இவ்வாறு கோபம் வருகிறது? நடந்த திவ்வளவே! வேறொரு இரகசியமு மில்லையே! உண்மை யாகக் கூறுகிறேன்.

சங். அடே புத்திசேனா! நானுன்னை இவ்வளவு வேண்டியும் என்னிடம் அசத்தியம் பேசுகிறாயல்லவா?

புத். ஓஹோ! இதற்கென்ன செய்வது!—நண்பனே! நண்பனே! நான் கூறிய தவ்வளவும் சத்தியமே. இது தவிர வேறொன்றும் அங்கு நடக்கவில்லை, இது சத்தியம்! சத்தியம், சத்தியம்! இதோ பூமிதேவி ஆகாயவாணி யறியும்படியாகக் கூறுகிறேன். நான் இப்பொழுது கூறியது அசத்தியமாக இருக்குமாயின், தன் குருவிற்குத் துரோகம் நினைத்தவனும், தனதரசனைக் கொன்றவனும், தனக்கு உணவிட்டுக் காப்பாற்றினோருக்கு விஷங்கொடுத் தவனும், மூத்தோர் பெரியோரைப் பழித்தவனும், அயலார் மனையாட்களைப் பெண்டாள விரும்பினவனும், தன் தகப்பனுயிரைப் போக்கினவனும், தன்னுயிர் நண்பனுக்குத் துரோகம் நினைத்தவனும், செல்லும்படியான எரிவாய் நரகத்தில் மீளாது விழக்கடவேன்!

சங். அடே! பொய்யாகப் பிரமாணஞ் செய்கிறாயா? எனக்கே நீ துரோகம் நினைக்கிறாயா?

புத். நண்பனே! [அவன் காலைப்பற்றுகிறான்]

சங். விடடா என் காலை!

புத். ஐயனே! ஐயனே! நீர் என்மீது சற்று கருணைகொள்ள லாகாதோ? நானுமிடத்திற் பொய் யுரைப்பேனா? உம் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! இனி நான் என் செய்வேன்!

சங். சீ! சீ! [அவனை உதைத்து] சீ! அற்பனாகிய உன்னிடம் சமானமாக நேசங் கொண்டதினாலல்லவா இவ்வளவு வந்தது? நீ அற்பன்! இழிந்த வம்சத்திலுதித்த உனக்கு என்ன தெரியும்? சீ! என் முகத்தில் நீ இனி விழிக்கவேண்

டாம், உன்னைப் பார்ப்பதே பாவம்! உன்னுடைய நட்பை இன்றோடே விட்டேன்! இனி என் முன் நில்லாதே போ! [போகிறான்.]

[உப்பரிகையின் மீதிலிருந்து இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த புஷ்பவல்லி மறைகிறாள்.]

புத். ஈசனே! ஈசனே! இதுவோ எனக்கு விதித்த விதி! நானினி எனது நண்பனை எக்காலத்தில் காணப் போகிறேன்! ஆ! நண்பனே! நண்பனே! நீ எனக்கு என்ன கொடுமையான கட்டளையிட்டுச் சென்றாய்? உன்னுடன் நானினிப்பேசலாகாதோ? உன்னை நான் என் கண்ணால் இனிமேல் பார்க்கப்போகாதோ? உன்னுடன் பேசாமலும் உன்னைக் காணாமலும் நானெவ்வாறு உயிர் வாழ்வேன்? ஐயோ! உனக்கு என்மீது சற்றுங் கருணையில்லாமற்போனது என்ன காரணம் பற்றியோ? ஏனோ இவ்வாறு என்மீது கோபங்கொண்டாய்? நீ என்னை அசத்தியவான், பொய்யன், உண்மையில்லாதவன் என்று கூறியதற்காக நான் வருத்தப்படவில்லை. நான் அற்பன் தான், இழிந்த குலத்திலுதித்த எனக்கு என்ன புத்தியிருக்கப் போகிறது? என்னை நீ உன் காலாலுதைத்ததற்குக்கூட நான் மனம் வருந்தவில்லை-நண்பனே! உதைத்தால் இவனுக்குக் கோபம் வருமென்று நினைத்தாயோ? வாராது வாராது! உன் மலர்போன்ற பாதமானது என் மேனியிற் பட்டதனால் நொந்ததோ? உன்பாதம் என் உடலிற் படவேண்டுமென்று நான் எத்தனை ஜன்மங்களாகத் தவஞ்செய்தேனோ? இது நான் பூர்வ ஜன்மங்களிற் செய்த புண்ணியத்தின் பயனேயாம். இவைகளுக்கெல்லாம் நான் துயரப்படவில்லை. ஆயினும்—ஆயினும்—என்னை உன்னுடைய நட்பினின்றும் நீக்கிவிட்டதாகக் கூறினையே! இத்துயரை நான் எவ்வாறு சகிப்பேன்! இதற்கு நான் யாரை நோவது? யாரை நொந்தும் பயனென்ன? என்னையே நான் நொந்துகொள்ளவேண்டும். ஆ! அரசர்களுடன் நேசஞ் செய்வதினாலல்லவோ இத்

துயரம் எனக்கு நேரிட்டது? சீ! சீ! இனி அவர்களுடன் நட்புக்கொள்ளலாகாது!—ஆ! அடா! புத்திசேனு என்ன நினைத்தாய்? என்ன நினைத்தாய்? உன் நண்பன் உன்னைக் கோபித்தாலென்ன? பழித்தாலென்ன? உதைத்தாலென்ன? அதற்காக நீ யவனிடம் வெறுப்பு கொள்ளலாமோ? இதுவோ உன் நட்பின் பெருமை? நீ யிதற்காக உன் நண்பனை வெறுத்தல் முறையோ? இதுவோ உன் அறிவு?—சீ! சீ! என் புத்தியை என்னென்று சொல்வது? சந்திரவதனன் கோபித்தாலென்ன? இதோ நான் சென்று அவருடைய பாதத்தில் மறுபடியும் வீழ்ந்து வேண்டினேனுயின் என்மீது அருள்கொள்வாரென்பதற்கையமில்லை. என்னிடம் ஏதோ தவறு இருந்தபடியினுற்றான் அவர் என்னைக் கடிந்து சென்றார். அரண்மனைக்குத்தான் சென்றிருப்பார். நான் அங்கு போகிறேன்.

[போகிறான்.]

காட்சி முடிகிறது.

இரண்டாவது அங்கம்

முதற் காட்சி

சுமந்திரர் வீட்டில் ஓர் அறை.

சுமந்திரர் வருகிறார்.

சும. ஏதாவது இம்மாதிரியான விபரீதம் வருமென்று எனக்கு முன்பேதெரியும், நானென்செய்வது? ராஜகுமாரனை மூன்று தினங்களாகத் தேடுகிறார்கள்; எங்கும் அகப்படவில்லை. புத்திசேனனையும் இந்த இரண்டு மூன்று நாட்களாக நான் காணவில்லை. அச்செட்டியோ இவ்விருவருடைய நட்பைப் பிரித்துவிட்டதாகக் கூறித்தன்

குச் சேரவேண்டிய பதினையிரம் பொன்னையும் பெற்றுச் சென்றனனும். இந்த இரண்டுபேர்களும் எங்குச் சென்ருர்களோ? ஒன்றுந் தெரியவில்லை. ஒருவேளை ஒருவரை யொருவர் கோபத்தினுல் கொலை செய்துக்கொண்டார்களோ? அல்லது இருவரும் ஒன்ருய் வேறு ஏதாவது தேசத்திற்குப் போனுர்களோ தெரியவில்லை.

விதூஷகர் வருகிருர்.

சும. விதூஷகரே, புத்திசேனனைப் பார்த்தீரோ?

விதூ. பார்த்தேன்.

சும. எப்பொழுது?

விதூ. ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் கண்டேன்.

சும. இப்பொழுது கண்டீரோ இல்லையோ?

விதூ. கண்டேன்.

சும. எங்கிருக்கிருன்?

விதூ. நமது உத்தியான வனத்தில் உட்கார்ந்துக் கொண்டிருக்கிருர். மூன்று நாளாக அன்னம் புசிக்கவேயில்லை. ஏதோ வயிறு தப்பிதஞ் செய்தாற்போலிருக்கிறது. எந்நேரமும் அழுத மூக்கும் சிந்திய கண்ணுமாக விருக்கிருர்!

சும. அப்படியா! நீர் உடனே சென்று நானழைப்பதாகச் சொல்லும்.

விதூ. இதோ போகிறேன். [போகிருர்.]

சும. ஓஹோ! சரி! ஆனல் இவர்கள் பிரிக்கப்பட்டது உண்மைதான்!—

புத்திசேனனும், விதூஷகரும், வருகிருர்கள்.

சும. விதூஷகரே, நீர் சற்று அப்புறம்போம். [விதூஷகர் போகிருர்] புத்திசேன! என் அருகில்வந்து நில்.—அடே, நீ என் முன்பாகவருதற்கு முகம் இருக்கிறதோ? சீ! நான் உன்னை என்னென்று சொல்வது? சற்றுப்பொறு, அப்புறம் அழலாம்; இளவரசரெங்கே? என்ன! கேட்பதற்குப் பதில் கூறுதிருக்கிருய்?

புத். ஏன்? அரண்மனையிலிருப்பார்.

சும. அரண்மனையி லில்லை. மூன்று நாட்களாகத் தேடுகிறார்கள், எங்குங்காணோம். நீங்களிருவரும் ஒன்றாய்ச்சேர்ந்து எங்கேயோ ஓடிப்போய் விட்டீர்களென்றல்லவோ நினைத்தேன். இதிருக்கட்டும், அடே புத்திசேனா! அன்று என்ன சொன்னாய் ? நாங்களிருவரும் ஒருநாளும் பிரிந்திருக்கமாட்டோம் ! அப்படிப்பிரிந்தால் உயிர்போய்விடுமென்று கூறினாயே, எங்கே! ராஜ குமாரனெங்கே? மூன்று நாளாயும் இன்னும் உயிருடன் நீ என் முன் நிற்கிறாயே ! சீ! சீ!

புத். தந்தையே, உம்முடைய விடைபெற்று இறப்பதற்கே காத்திருக்கிறேன்—இதோ—

[கத்தியை உருவுகிறான். சுமந்திரன் அவனது கையைபிடித்துக் கொள்கிறான்.]

சும. ஆ! ஆ! விடுவாளே!—புத்திசேனா! நீ என் குமாரனாயிருக்கத்தக்கவனல்லன். உனக்குயாரடா புத்திசேனனென்று பெயரிட்டது ? உனக்கு புத்தி ஹீனனென்றே பெயரிட்டிருக்க வேண்டும். இதுவோ உன்னுடைய புத்தி ? இதுவோ அறிவுடையவனது செய்கை? இப்பொழுது என்ன செய்யப் போகிறாய் ?

புத். ஐயனே, எனக்கு ஒன்றுந் தோற்ற வில்லை.

சும. புத்திசேனா! நான் முன்பு கூறியதைக்கேளாத படியினால் தான் இப்பெருந்துயரம் உனக்கு வந்தது. இப்பொழுதாவது என் சொற்படி நட. அப்படி என் கட்டளைப்படி நடவாவிட்டால் நீ என் குமாரனல்ல பிறகு நான் உன் முகத்தில் விழியேன்—கவனமாய்க்கேள். இப்பொழுதோ உன் நண்பன் உன்னிடங் கோபங்கொண்டு எங்கேயோ போயிருக்கிறான். நண்பன் கோபங்கொண்டால் பதிலாகக் கோபங் கொள்ளுதலோ நியாயம்? நீ இன்றே என்னுடைய வீட்டைவிட்டுப் புறப்படவேண்டும். நீ உன் நண்பனை உலக முழுவது மாவது தேடி, உயிருடன் இப்பட்டணத்திற்குக் கொண்டுவந்தால், என்னுடைய வீட்டில் நீ மறுபடியும் அடிவைக்கலாம். இல்லாவிட்டால் நீ வரு

வேண்டியதில்லை. நீ யுன் நண்பனைக் கொண்டுவந்தால் தான் உன் முகத்தில் இனி நான் விழிப்பேன். இல்லா விட்டால், உன்னை யிறந்த பிறகு தான் காண்பேன்.

புத். அண்ணு! எப்படி யாயினும் என் நண்பனை அழைத்துக் கொண்டு மறுபடியும்மைக் காண்கிறேன், பாரும்.

சும. சரி! நீ இனி என்னுடன் பேசவேண்டாம், போ உன் நண்பனைத்தேடி. [போகிருர்.]

புத். ஐயோ! விதியே! விதியே! என் நண்பனே என்னைத் துறந்து விட்டான். என் தந்தையோ என்னைத் துறத்தி விட்டார். நண்பனே! நண்பனே! நான் படுந்துயரம் நீ யறிகிருயோ! நானிப்பொழுது என்ன செய்வது? பிதா வினிடம் இளவரசரை எப்படியாவது கொண்டு வருவதாகக் கூறிவிட்டேன். நான் எனது நண்பனை எங்கென்று தேடுவேன்? ஆயினும், நானிங்கு ஆலோசிப்பதிற் பயனென்ன? இவ்வீட்டைவிட்டு நான் புறப்படவேண்டும். பிதாவோ இங்கு க்ஷணப்பொழுது மிருக்க வேண்டாமென்ருர். நானிக் கோலத்துடன் செல்வேனுகில் என் தோழனைக் காண்பதரிது. ஆதலால் மாறுவேடம் பூண்டே போக வேண்டும். நான் சந்நியாசி வேடம் பூணுகிறேன்.

[உள்ளேபோய் சந்நியாசி உடை தரித்து வருகிருன்.]

ஆஹா! இவ்வேடம் எனக்குத் தக்கதேயாம் ஐயோ! என் வீட்டை விட்டுச் செல்லவேண்டிய காலம் வந்து விட்டதல்லவா! ஆ! நான் பிறந்து இதுவரையில் வளர்ந்த இல்லத்தை விட்டுச் செல்கிறேன். நான் மறுபடியும் இங்கு வருவேனே? வரமாட்டேனே? யாரறிவார்? ஈசனே! எல்லா முமது கருணை, உம்மையே நம்பினேன். [போகிருன்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்.—தனபாலசெட்டி வீட்டில் ஓர் அறை.

புஷ்பவல்லி ஒரு மஞ்சத்தின்மீது உட்கார்ந்து அழுதுக்கொண்டிருக்கிருள். அவளது தோழி அவள் கால்மாட்டில் உட்கார்ந்திருக்கிருள். விதூஷகர் தூரத்தில் உட்கார்ந்திருக்கிருர்.

விதூ. அம்மணி, நீர் வீணுக வருந்துவதிற் பயனில்லை. மஹாராஜா உம்முடைய தந்தையைச் சிறைச்சாலையிலடைத்துவிட்டால் அதற்கு நாமென்ன செய்யலாம்? வீணுயழவேண்டாம்.

புஷ். ஐயா விதூஷகரே! நானுக நேரிற்சென்று மஹாராஜாவின் பாதத்தில் வீழ்ந்து வேண்டினுல் ஒருவேளை என் பிதாவை விட்டுவிட மாட்டாரோ?

விதூ. அம்மா, அப்படிச் செய்வதில் பிரயோஜனமில்லை. மஹாராஜா மிகவுங் கோபங்கொண் டிருக்கிருர். இளவரசர் உயிருடன் வந்தா லொழிய ஒருகாலும் உம்முடைய பிதாவை சிறையினின்றும் விடேனென்று உறுதியாகக் கூறிவிட்டார்.

புஷ். ஆயின் நான் என் பிதாவை இனி எப்படிக்காண்பேன்? நான் என் கண்ணுல் காணப் போகிறதில்லை!

தோ. தாயே, நீ அழவேண்டாம். சீக்கிரத்தில் காண்பாய்.

விதூ. ஆம், அதற்குச் சந்தேகமில்லை. இளவரசர் எப்படியுஞ் சீக்கிரத்தில் பட்டணத்திற்கு வந்து விடுவார். மந்திரி குமாரனுகிய புத்திசேனன் எப்படியாவது கொண்டு வருவதாக அவரைத் தேடிப்போ யிருக்கிருர். ஆதலால், இளவரசர் சீக்கிரம் வருவாரென்பதற்குச் சற்றேனும் சந்தேகமில்லை. அவர் வந்தவுடன் உம்முடைய பிதா சிறையினின்றும் விடுபடுவார்; அம்மணி, இப்பொழுது வருந்தவேண்டாம் என்று உமக்குக் கூறும்படியாக எனக்குக்கட்டளையிட்டார். தோழி, உன்னுடைய தலைவிக்கு தேறுதல் சொல், நான்போய் வருகிறேன். [போகிருர்.]

தோ. அம்மணி! இதென்ன தைரியத்தை விடலாமா?

புஷ். என் அருமைப் பாங்கியே ! என் ஜன்மத்தை நானென்ன வென்று சொல்வது? ஐயோ விதியே ! என்னை இக்கோல முங் காண்பாயா நீ! நானென்னையே நோக வேண்டும். நாளிருவருடைய நட்பைப் பிரித்ததனு லல்லவா என் பிதாவினிடமிருந்தும் நான் பிரிக்கப்பட்டேன். அம்மட் டோ, என் காதலனும் எங்கேயோ நாட்டைவிட்டுப்போய் விட்டார். ஐயோ ! அவர் இங்கிருந்தபோது அடிக்கடி என் கண்களாலே யாவது கண்டு களித்து வந்தேன். இப் பொழுது நானென்ன செய்வேன்? தோழி, என் காத லனை நான் காண்பேனு!

தோ. அம்மா, எப்படியுங் காண்பீர். அதுவேயன்றி அவரை மணமும் புரிவீர் என்றே எனக்குத் தோற்றுகிறது.

புஷ். நான் நினைக்கவில்லை ஒருவேளை அவர் திரும்பி வந்த போதிலும் அதுவரையில் நானெப்படி உயிரோடிருப் பேன் ?

தோ. பெண்கள் நாயகமே, இவ்வாறிருப்பது நியாயமல்ல. அவர் எப்படியுஞ் சீக்கிரத்தில் வருவார். அவர் வருமள வும் ஏதாவது ஒன்றின்பேரில் மனம் போக்கா யிருக்க வேண்டும்.

புஷ் தோழி, என்மனம் வேறென்றின் பேரிலும் செல்லவில் லையே ! எந்நேரமும் என் கண்ணாளனையே நாடுகிறதே! நானென் செய்வேன் ?

தோ. தாயே, அவ்வாருயின் நீர் அவரைப்போல் ஒருபடம் எழு தினீரே அதையாவது பார்த்துக் கொண்டிரும். இதோ அதை எடுத்து வருகிறேன்.

[போய் ஒரு படத்தை எடுத்துவருகிருள்.]

புஷ். பாங்கி, இதுவா அவருடையபடம்? இது அவருடைய அழகில் ஆயிரத்தில் ஒருபங்கு உடைத்தா யிருக்கவில் லையே. இளவரசருடைய அழகு எழுதத்தக்கதோ? காதலனே, உம்மை நான் எப்பொழுது பார்க்கப் போகி றேன்? தோழி! என் கண்ணீர் இப்படத்தைப் பார்க்க வொட்டாமல் மறைக்கிறது. நானென்ன செய்வது ?

தோ. முன்பு போஜனம் கொள்ளும், பிறகு ஒரு யோசனை சொல்லுகிறேன். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்:—ஓர் அடர்ந்த காடு.

ஒரு ரிஷி தபசுசெய்துக்கொண்டிருக்கிறார்.

புத்திசேனன் வருகிறான்.

புத். ஐயோ! இந்த அகோரமான ஆரண்யத்தில் வழிதெரியாது நான் அகப்பட்டுக்கொண்டு மூன்று நாளாய் விட்டதே. இம்மூன்று நாட்களாக அருந்த அன்னமும் குடிக்க நீரு மின்றி நான் தவிக்கிறேனே. இவ்வடர்ந்த கானகத்தை விட்டு வெளியே செல்லும்படியான மார்க்கத்தைநானொன் றும் காணேனே! இக்காட்டில் வழியகப்படாது திரிந்து திரிந்து என்காலெல்லாம் முட்கள் தைத்து ரத்தம் சொரிகிறது. என் மனமுஞ் சுழல்கிறது. இதற்கோ நானிங்கு வந்தேன்? இங்கு நான் இறக்க வேண்டியது தானோ? கடவுளே! இதுவோ என்னுடையவிதி? ஐயோ! நானிறப்பதற்குச் சற்றேனு மஞ்சவில்லை-ஆயினும் நான் உயிர்விடுமுன் என் நண்பனுடைய முகத்தை ஒருகால் கண்டு பின்பு இறக்கலாகாதா? நண்பனே! நானுன்னைக் காண்பேனென்னும் ஆசையை இன்றுடன் விட்டுவிட் டேன்! இத்துயரத்திற்கஞ்சி என்வாளுக்கு இரையாய் விடலாமென்றாலோ, தற்கொலை மஹாபாதகமென்றும், அப்படிச் செய்யலாகாதென்றும் பிதா கட்டளையிட்டி ருக்கிறார். தானாக இறக்கவும் சுவாதீனமில்லாத என் னுடைய வாழ்வு என்ன வாழ்வு! சீ! இவ்வனத்தில் வாழுங் கொடிய மிருகங்களாவது என்னைக்கொன்று புசித்து எனதுயிரை நீக்கிவிடலாகாதா? வனவிலங்கு காள்! உமக்கும் என்மீது ஏன் கருணையில்லாமற்போ

யிற்று? நான் இங்கு வருந்தி அழுகிறேனே! என்மீது கருணைபுரிந்து என்னைக்கொன்று தின்று விடலாகாதா? ஐயோ! ஏன் என்னைக்கண்டஞ்சி ஓடுகிறீர்கள்? ஆ! மஹாபாதகனாகிய இவனைப்பார்த்தலும் தவறெனக்கருதியே போலும். நண்பனைத்துறந்து வந்த மஹாபாபியாகிய இவனை நாம் அருந்தினும் பாபமென்று நினைத்தீர் போலும்! இத்துயர்க் கடலினின்றும் நான் எப்படிக்கரையேறுவேன்? இக்காட்டினின்றும் வெளியே போகவோ வழியகப்படவில்லை. நானாக இறக்கவோ சுவாதீன மற்றவனாயிருக்கிறேன். இம்மிருகங்களும் என்னைப்புசியாதிருக்கின்றன. இதற்கு நானென்செய்வேன்? ஆ! கடவுளே! கடவுளே! உம்மை நான் நம்பிவந்ததற்கு இதுவோ பலன்? உமக்கு ஆபத்பாந்தவன் என்றும், ஆபத்சகாயனென்றும், ஏனோ பெயரிட்டார்கள்? இப்பயங்கரமான ஆரண்யத்தில் நான் அனாதியாய் வருந்தி அழுகிற குரல் உமக்குக்கேட்க வில்லையோ? நீர் எங்கும் நிறைந்த பொருளாயிருந்தும் தமியேனுடைய அழுகுரல் மாத்திரம் உமது செவிக்கு எட்டாதிருப்பது எவ்வண்ணமோ! அல்லது நாயினுங்கடைப்பட்ட இவனுக்கு நாம் அருள் புரிவது நலமல்ல என்று கருதி சும்மாயிருக்கிறீரோ? உம்மை கருணைக்கடலென்றும், கிருபா சமுத்திரமென்றும் மனிதர் ஏன் துதிக்கின்றனர்? இதுவோ உம்முடைய கருணை? ஐயோ! தன்னுடைய பேடைக்கருதிச் செல்லும்படியான ஒரு தவளை ஒருபெரிய கரும்பாம்பின் வாயிற்பட்டு எவ்வாறழுமோ, எவ்வாறு கதறுமோ, எவ்வாறு பதறுமோ, அவ்வாறு என்னுயிர் நண்பனைத்தேடிச் செல்லும்படியான நான் இந்தப் பெருங்காட்டில் அகப்பட்டு வழிதெரியாது கதறுகிறேனே! ஏனோ என்மீது உமக்கு அருளில்லாமற் போயிற்று? ஆ! ஈசனே! எப்படி இருந்தபோதிலும் நீரே எனக்குக்கதி. உம்மையன்றி எனக்குவேறு துணையில்லை. நான இப்போது இறப்பேனாயின் அப்பாபம் உம்முடையதே.—ஆ! இதென்ன ஆச்சரியம்! இங்கு யாரோ ஒரு மஹரிஷி உட்கார்ந்துக்

கொண்டு தவஞ் செய்கிறார். இவரைப் பார்க்குமிடத்து நீறுபூத்த நெருப்பைப் போற் காணப்படுகிறார். இவரை சாக்ஷாத் சிவபெருமான் என்றே சொல்லவேண்டும். ஒரு வேளை முக்கண்ணனே நமது வேண்டுகோளுக்கிரங்கி இவ்வாறு வந்தனரோ? அப்படித்தானிருக்க வேண்டும். நிஷ்டையிலிருக்கிறார்—இவர் பாதத்தில் வீழ்ந்து என் குறைகளைக் கூறுவேனாயின் எனக்கெப்படியும் அருள் புரிவார். [காலில் விழுந்து பணிகிறான்.]

தவச்சிரேஷ்டரே! என்துயர் தீர்க்க வந்த கற்பகமே! உம்மைநான் அடைக்கலம் புகுந்தேன். அபயம் அபயம்!

ரிஷி. அப்பா குழந்தாய்! நீ யார்? இங்குவந்த காரணம் என்ன? எழுந்திரு.

புத். ஐயனே, நான் ஒரு மந்திரியின் குமாரன், இளவரசராகிய எனது நண்பனை விட்டு ஒரு காரணத்தால் பிரிந்து அவரைத் தேடிவந்தேன். நீர் என்மீது கருணைபுரிந்து நான் கேட்கும் வரத்தைக் கொடுக்கிறேனென்று உமது திருவாக்கால் கூறுவிட்டால் இவ்விடத்தைவிட்டு நான் எழுந்திரேன். உமது பாதத்திலேயே எனதுயிரை மாய்த்துக் கொள்வேன்.

ரிஷி. குழந்தாய், எழுந்திரு, அவ்வாறே நான் வரந்தருகிறேன்.

புத். நீரோ திரிகாலவர்த்தமானமும் அறிந்தவர், ஆதலால் எனது தோழனாகிய சந்திரவதனராஜன் இப்பொழுது எங்கிருக்கிறானென்று எனக்குத் தெரிவிக்கவேண்டும். அதுவுமன்றி இக்கானகத்தை விட்டுச் செல்ல வழியுங் காண்பிக்க வேண்டும் தேவரீர்.

ரிஷி. அப்பா, உன்னுடைய நண்பன் இப்பொழுது தனது மாமனார் வீட்டிலிருக்கிறான். இதோ தெற்குமுகமாய்ச் செல்வாயாயின் நான்கு காத வழிக்கப்பால் உன் நண்பனிருக்கும் நகரத்தைக்காண்பாய். ஆயினும்,—அதைரியப்படாதே—உன் தோழனுக்கு இன்றிரவு பெருந்தீங்கு நேரிடப்போகிறது.

புத். ஐயோ! அப்படியா? சுவாமி! ஆனால் போக எனக்குச் சீக்கிரம் விடையளிக்கவேண்டும். என் மனம் பதறுகிறது. இதற்குள்ளாக எனது நேயனுக்கு என்ன தீங்கு நேரிட்டு விட்டதோ?

ரிஷி அப்பா, அத்தீங்கு உன்னாலேயே முடிவில் நீங்கும், பயப் படாதே, சீக்கிரம்போ.

புத். சுவாமி, தேவரீர் செய்த மஹோபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? தங்களுடைய அருளிருக்குமாயின் என் நண்பனுக்கு வரப்போகிற தீங்கை நானெப்படியுந் தீர்ப்பேன். நான் போய் வருகிறேன்.

[நமஸ்கரித்துப் போகிறான்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி

இடம்—கலிங்கத்து அரண்மனையின் மதில்.

ஒரு சேவகன் காவலிருக்கிறான்.

புத்திசேனன் வருகிறான்.

புத். இராப்பொழுது வந்து நெடுநேரம் மாகிவிட்டதே! இன்றிரவில் எப்படியாவது நான் இளவரசரைப் பார்க்கவேண்டுமே! அரண்மனையின் நான்கு கோபுரவாயில்களிற் சென்று அங்குள்ள காவலாளரை நான் என்ன வேண்டியும் உள்ளே விடமாட்டேனென்கிறார்கள். நான் மந்திரி குமாரன், அரசனுடைய நண்பனெனக் கூறுவேனாயின், ஏதோ பயித்தியம் பிடித்திருக்கிறது என்றே நினைப்பார்கள். இதற்கென்ன செய்யலாம்? அதோ வொரு திட்டி வாயில் தோற்றுகிறது. அங்கு ஒரு சேவகன் நிற்கிறான். அவனையாவது வேண்டிப் பார்க்கிறேன். எல்லாம் சுவாமியினுடைய கருணை. [அருகிற்போகிறான்.]

சேவ. யாரடா அது? நில் அங்கே.

புத். யாருமில்லையப்பா, நானொருபரதேசி.

சேவ. இங்குராஜா அரண்மனை யண்டை உனக்கென்ன வேலை?

புத். ஒன்றுமில்லை, ஒரு காரணமாக தேசசஞ்சாரம் செய்து வருகிறேன். அப்பா, நான் உள்ளே போகலாமா?

சேவ. ஏய்! உன்னைப் பார்த்தால் சந்நியாசியைப்போலிருக்கிறது, உனக்கென்ன ராஜா அரண்மனைக்குள் வேலை?

புத். அப்பா, உன்னை மிகவும் வேண்டிக் கொள்கிறேன். நான் இன்றிராத்திரி எப்படியாவது உள்ளே யிருக்கிற ஒரு சிநேகிதரைப் பார்க்கவேண்டும் இந்த உதவிமாத்திரம் எனக்கு நீ செய்யவேண்டும்.

சேவ. ஓஹோ! இப்பொழுது தெரிகிறது; நீ என்ன, பகல் பரதேசி ராத்திருடன்போ லிருக்கிறது; மஹாராஜா வீட்டில் ஏதோ பெருத்த விருந்து நடக்கிறது, இது தான் சமயம், நாம் உள்ளே போனால் ஏதாவது திருடிக் கொண்டு வரலாமென்று நினைக்கிறாயோ?

புத். ஐயா, என்னைப் பார்த்தால் திருடனைப்போலவா தோற்றுகிறது?

சேவ. அதிருக்கட்டும், இங்கே உள்ளேபோக வழியேது? இந்தத்திட்டிவாசலிருக்கிறதென்று பார்க்கிறாயோ, அது உள்ளே பூட்டபபட்டிருக்கிறதே.

புத். [தனக்குள்] சரி, இனிநா மென்ன செய்யலாம்? எனக்கோ நடந்து வந்ததனால் மிகவும் இளைப்பாக இருக்கிறது, சற்று இங்கே படுத்திருந்து யோசித்து பிறகு ஏதாவது செய்வோம். எப்படியும் நான் சந்திரவதனனைக் காண வேண்டும்—அப்பா, நான் இங்கே படுத்துக்கொள்ளலாமா?

சேவ. ஐயோ பாவம்! படுத்துக்கொள். பத்திரம்! நான் உறங்கப்பார்த்து என்னிடமிருந்து ஏதாவது திருடிக்கொண்டோடப்போகிறாய்!

கோத்தவால் வருகிறான்.

கோத். அடே சேவகா!

சேவ. ஸ்வாமி !

கோத். பத்திரம், ஜாக்கிரதையாயிரு, தூங்கப் போகிருய்! ராஜாவினுடைய மருமகப் பிள்ளைக்கு விருந்து நடக்கிறது. இதுதான் சமயமென்று திருடர் வருவார்கள். ஜாக்கிரதை, யாராவது வந்து நான் எங்கேயென்று கேட்டால், இதோ இங்குதான் காவல் செய்கிருரென்று சொல்; திருடர் யாராவது வந்தால், வீட்டில் தூங்கிக்கொண்டிருப்பேன், என்னை அங்குவந்து எழுப்பு.

சேவ. உத்தரவு படியே மஹாராஜ்!

கோத். ஜாக்கிரதை. [போகிருன்.]

சேவ. அப்பா! ஒழிந்தானையா!—போ, தூங்குபோ—இதுதான் நமக்குச் சமயம். சந்நியாசியும் தூங்குகிருன்போலிருக்கிறது. ராஜா அவர்களெல்லாம் விருந்து சாப்பிட்டால், நாம் சாப்பிட வேண்டாமா? தேவாமிர்தம்—பலே, பலே! ஐயா, சந்நியாசி, நீர் சாப்பிடுகிறீரா கொஞ்சம்? [குடித்து விழுகிருன்.]

புத். ஆஹா! நன்ருய்க்காவல் செய்கிருர்கள். இப்படியல்லவோ இருக்க வேண்டும்! அதிருக்கட்டும் காலதாமத மாகிறதே! என் நண்பனை நானெவ்வாறு சீக்கிரத்தில் காண்பது — ஆ! யாரோ இவ்வழியாக நடந்து வருகிறது போல் இருக்கிறது—

சண்பகமாலை மெல்ல திட்டிவாசலைத்திறந்து கொண்டு வருகிருள்.

சண். ஐயோ! நமதாசை நாயகர் கோபித்துக் கொள்வார். இவ்வளவு நேரமாகிவிட்டதே, நானென்ன செய்வேன்? எனது கணவனை உறங்கச்செய்ய இவ்வளவு நேரமாகிவிட்டது. நான் விரைந்து செல்கிறேன். [போகிருள்.]

புத். [எழுந்து] ஆ! இதென்ன ஆச்சரியம்! இப்பொழுது சென்ற ராஜஸ்திரீ நமதிளவரசருடைய மனையாளல்லவா! நான் இளவரசருக்கு விவாகமாகிய காலத்தில் பார்த்திருக்கிறேன். அதற்குச் சற்றேனும் ஐயம் இல்லை. இப்பொழுது அர்த்தராத்திரியில், கருக்கிருட்டில், ஒரு துணையுமில்லாது, திட்டிவாசல் வழியாக மஹா ராஜா

வினுடைய மகள் இவ்வழியாகச் செல்வானேன்? இளவரசரோ வீட்டிற்கு வந்திருக்கிருர். இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. ராஜஸ்திரீ கூறின மொழிகளிலும் எனக்கு ஏதோ சந்தேகம் தட்டுகிறது. நான் பின்தொடருகிறேன். [பின்தொடருகிருன்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி.

இடம்:—அதேயிடம்.

புத்திசேனன் திரும்பிவருகிருன்.

புத். ஹா! ஹா! இந்த வியசனத்தை நானென்னென்று சொல்வேன்? காட்டில் அந்த ரிஷிகூறிய உண்மைதான், சந்திரவதனனுக்குச் சிறிது பொழுதில் பெருந்தீங்கு விளையப்போகிறது. ஐயோ! என் நண்பன் சற்று நேரத்தில் இறக்கப்போகிருன், நானதை யெவ்வாறு தடுப்பேன்? ஆ! என்ன ஆச்சரியம்! கலிங்கதேசத்து மஹாராஜாவின் மகளும், சூரியகுலத்திலுதித்த நகுலராஜாவின் மருமகளும், அழகில் ஒப்பில்லாத சந்திரவதனனுகிய இளவரசருடைய மனைவியுமான, இப்படிப்பட்ட ராஜஸ்திரீ ஒரு அற்ப—ஐயோ! என் வாயால் சொல்லுவதற்கு நாவர வில்லையே! ஸ்திரீகளுடைய மனத்தை யாரால் அறியக் கூடும்? ராஜாவினுடைய பெண் இவ்வாறு அற்பத்தொழில் பூண்டிருப்பதாக நான் வெளியில் கூறினும் ஒருவரும் என்னை நம்பமாட்டார்களே! இதைப் பற்றி இப்பொழுது யோசிப்பதிற் பயனென்ன? இக்கொடிய பாதகி தன் கணவனுக்குத் துரோகஞ் செய்ததுமன்றித் தன் ஆசை நாயகனது கட்டளைக்குட்பட்டு இப்பொழுது தன் கணவனைக்கொன்று விடவும் போகிருள்.

நானிதை யெவ்வாறு தடுப்பேன்? திட்டிவாயிலோ பூட்டப்பட்டிருக்கிறது. ஐயோ! வேறுவழியைக்காணேன். இதோ வருகிறாள் மஹாபாதகி! இவள் பின்னே சென்று என் நண்பனைக் கொல்வதற்குமுன் நானவரைக் காப்பாற்ற வேண்டும். [ஒருபுறம் ஒதுங்குகிறான்.]

சண்பகமாலை வந்து திட்டிவாசலைத்திறந்து கொண்டு உள்ளே போகிறாள்.

ஈசனே! நீயே துணை! [பின் தொடர்ந்து போகிறான்.]

காட்சி முடிகிறது.

ஆறாம் காட்சி.

இடம்:—கலிங்கத்து மன்னன் அரண்மனையில் ஒரு பள்ளியறை.

சந்திரவதனன் ஒருபுறமாய் மஞ்சத்தின்மீது உறங்குகிறான்.

சண்பகமாலை சந்தடிசெய்யாமல் வருகிறாள்.

சண். இன்னும் அயர்ந்து நித்திரை செய்கிறார். இது தான் நமக்குச் சமயம் நமது ஆசை நாயகரோ என் கணவனைக் கொன்று விட்டாலல்லது தன்னிடம் வரவேண்டாமென்று உறுதியாகக்கூறிவிட்டார். நான் இனியோசிக்கலாகாது.

[சந்திரவதனன் அருகிற்போய் வாளால் வெட்டுகிறாள்.]

புத்திசேனன் ஓடிவருகிறான்.

புத். ஆ! ஆ! [கையைப்பிடித்துக்கொண்டு கத்தியைப் பிடுங்கிக்கொள்ளுகிறான்.]

சண். ஐயோ! ஐயோ! ஐயோ! தந்தையே! தந்தையே! யாரோ ஒருவன் வந்து என் கணவனைக் கொன்றுவிட்டான்! இங்கு ஒருவருமில்லையோ? ஒருவருமில்லையோ? சேவகா! சேவகா! கொத்தவால்! என் கையைப்பிடித்திழுக்கிறான்! ஐயோ! ஐயோ!

கோத்தவாலும் சேவகனும் ஓடி வருகிறார்கள்.

கோத். அம்மணீ! அம்மணீ! என்ன சமாசாரம்?

சண். ஐயோ! கொத்தவால்! நான் என்ன சொல்லப்போகிறேன், யாரோ மஹா பாபி என் பிராணநாதனுடன் நானுறங்கும் பொழுது வந்து, நான் தடுப்பதற்கு முன்பாக ஒரேவெட்டாய் வெட்டிவிட்டான்! வெட்டிவிட்டான்!

கோத். ஆ! ஆ! சேவகா பிடித்துக்கட்டு இவனை!

சண். யாராவது சீக்கிரம்போய் தந்தையிடம் சொல்லுங்கள்! ஐயோ! பாபி! என் கணவனை நான் மறுபடியும் எப்பொழுது காண்பேன்? ஒரேவெட்டாய் வெட்டிவிட்டானே! என் கையைப் பிடித்திழுத்து என்னைப் பெண்டாளப் பார்த்தானே! சண்டாளன்! ஐயோ! கொத்தவால், அவன் கையிலிருக்கும் கத்தியைப் பார். அதில் இன்னும் என்னுடைய நாயகனது ரக்தம் ஒழுகுகிறது!

சேவ. அடே! ராஜஸ்திரீ ஆயிற்றே, கையைப்பிடித்திழுக்கலாமா!—ஏனடா கீழே போடுகிறாய் கத்தியை?

சண். ஐயோ! இப்பாதகன் எனக்கென்று பிறந்தானோ? என் எண்ணங்களையெல்லாம் வீணாக்கிவிட்டானே? இன்னும் என் நாயகன்வந்து இரண்டுதினங் கூட ஆகவில்லையே! நானென் செய்வேன்! ஐயோ! நாயகா! இக்கொடும் பாவி உம்மைக்கொல்லும் பொழுது உம்முடையமனம் எவ்வாறுகலங்கிற்றோ! நீர் என்ன எண்ணினீரோ? என்னிடம் ஒரு வார்த்தைகூட நீர் சரியாகப் பேசவில்லையே! நீர் என்ன என்ன எனக்குச் சொல்லலாமென்று நினைத்தீரோ? இச்சண்டாளன் எல்லாவற்றையும் பாழாக்கினானே. பிராணநாதா! நானும்மை மறுபடி எப்பிறப்பில் உயிரோடு காண்பேன்? ஆ! [தேம்பி அழுகிறாள்.]

கோத். அடே துரோகி! ஏனடா கொன்றாய்? சேவகா, இவன் ஒன்றுஞ் சொல்லமாட்டேனென்கிறானே!

சேவ. உதைமேல் உதை உதைத்தால் எல்லாம் வெளியில் வந்துவிடும் ஸ்வாமி.

கோத். ஆம் இவளை ஜாக்கிரதையாகக் கடும்பாராவிலடைத்து வை, அம்மணி, நீர் அழவேண்டாம் நடந்துவிட்டதற்கு நாமென்னசெய்வது ?

சண். கொத்தவால், இப்பாவியை உடனே கொன்றுவிடு.

கோத். இதோ! அதற்குத் தடையேயில்லை. மஹாராஜாவிற்குத்தெரிவித்து பிறகு செய்கிறேன். இதோ போகிறேன்.

[புத்திசேனனை அழைத்துக் கொண்டு சேவகனுடன் போகிறான்.]

காட்சி முடிகிறது.

ஏழாம் காட்சி

இடம்:—கலிங்கத்து மன்னன் தர்பார்.

கலிங்கத்து மன்னன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.

சுபுத்தி முதலிய மந்திரிகள் இருபாரிசத்திலும் இருக்கின்றனர்.

சேவகர்கள் வாயில்களில் காத்து நிற்கின்றனர்.

கலி மந்திரி, நான் இந்நாட்டிற்கு மஹாராஜாவாயிருந்தும், என்னுடைய அரண்மனையில் ஒரு கள்வன் வந்து, என் மருமகனைக் கொல்லும்படியான காலம் வந்து விட்டதல்லவா! நான் செங்கோல் நடாத்து முறைமை மிகவும் நன்றாயிருக்கிறது!

சுபு. மஹாராஜா, இது தங்களுடைய செங்கோலின் குற்றமன்று, ஏதோ விதி வசம்.

கலி. ஆ! சுபுத்தி, நகுல சக்ரவர்த்தியானவர் தன் மகன் எங்கேயென்று கேட்டால் நான் என்ன சொல்வேன்? பெரும் பழிக்கு ஆளாயினேனே! எனது மருமகனிறக்கவும், எனது புத்திரி கொழுநனை யிழக்கவும் காலமாயிற்றல்லவா!—ஆ! மந்திரீ! மந்திரீ! என்னுடைய புதல்வி கைம்பெண்ணாக நான் எவ்வாறு பார்த்திருப்பேன்!

சுபு. மஹாராஜா, தாங்கள் இவ்வாறு வருத்தப்படலாகாது. ஐயனே, எல்லாமறிந்த தாங்களே இவ்வாறு வியசனப் பட்டால் நாங்களென்ன செய்வது? விதியை வென்றார் யார்? ஒருவருமில்லையே. நடந்துவிட்ட காரியத்தைக் குறித்து நாம் வியசனப்படலாமா?

கலி. மந்திரி! சந்திரவதனனைக் கொன்ற அக்கொடிய பாதகனை உடனே சிரச்சேதம் செய்து விடும்படியாகக் கட்டளையிடும்.

சுபு. மஹாராஜா, அதற்குத்தடை யொன்று மில்லை. ஆயினும் எவ்வளவு கொடிய பாதகனாயிருந்த போதிலும் தீரவிசாரணை செய்தே அப்புறம் தண்டனை விதிக்க வேண்டும்.

கலி. அப்பாவி யிறந்தாலொழிய என் துயரஞ் சற்றுந்தணியாது. சீக்கிரம் வரவழைப்பாய்.

சுபு. சேவகா, உடனே சென்று கொத்தவாலை ஜாக்கிரதையாக கைதியைப் பாராவுடன் கொண்டு வரச்சொல்.

சேவ. உத்தரவுபடி ஸ்வாமி.

[வெளியிற்சென்று புத்திசேனனை இரும்புச் சங்கிலிகளால் கட்டி அழைத்து வருகிறான்.]

கோத்தவால் முதலியவர்கள் உருவியகத்தியுடன் வருகிறார்கள்.

புத். ஈசனே! ஈசனே!

கோத். சீக்கிரம் போகிறாயா என்ன? போ, மஹாராஜா சந்நிதானத்திற்கு.

கலி. அடா பாவி! மஹா பாதகா! ஏனடா சந்திரவதனனைக் கொன்றாய்? ஐயோ!—

சுபு. அரசே, தாங்களிவ்வாறு மனத்தளர்ச்சி யடையலாகாது. நான் விசாரிக்கிறேன். மஹாராஜா சற்றுச் சும்மாயிருக்க வேண்டும்.

கலி. ஆம் சுபுத்தி, நீயே விசாரி. இப்பாதகனுடன் பேசுதலும் பாவம்.

சுபு. கொத்தவால், நடந்த விஷயத்தை ஒன்றும் ஒளியாது கூறுவாய். உண்மையைச் சொல்.

கோத். சுவாமி, அப்படியே. நேற்றைத்தினம் இரவு சுமார் பதினைந்து நாழிகைக்கு நான் நகர்பரிசோதனை செய்து கொண்டுவரும் பொழுது, அரண்மனையின் அந்தப் புரத்திலிருந்து ஒரு ஸ்திரீயின் குரல் கேட்க, நானும் சேவகனுமாக திறந்திருந்த அந்தப்புரத்தின் வாயில் வழியாகச் சென்றோம். ஐயோ! நாங்கள் அங்கு கண்ட காக்ஷியை என்னென்று சொல்வோம்! சந்திரவதன ராஜன் தன் கழுத்தறுப்புண்டு பஞ்சணையின் மீது இறந்து கிடந்தார். ராஜஸ்திரீ தன் பர்த்தாவின் மார்பின் மீது விழுந்தழுது கொண்டிருந்தார்கள். இப்பாவியோ, ராஜகுமாரனை வெட்டிய கத்தியைக் கையிலே பிடித்துக்கொண்டு நின்றான். ராஜ குமாரனுடைய கழுத்தினின்றும் ரக்தம் தாரை தாரையாகச் சொரிந்து கொண்டிருந்தது. இப்பாதகன் எங்களைக்கண்டவுடன் தன் கையில் ரக்தம் துளித்துக் கொண்டிருந்த உடைவாளைப்போட்டு விட்டான். ராஜ குமாரத்தி இக்கொடிய பாவி அரசரைக் கொன்றதாகவும், பிறகு—தன் கையைப்பிடித் திழுத்ததாகவும், முறையிட்டார்கள். ஸ்வாமி, இதுவே நாங்கள் கண்டது. இதில் பொய் ஒன்றுமில்லை. இதோ அவ்வுடைவாள்.

கலி. மந்திரி, இன்னும் என்ன விசாரிக்க வேண்டும்? இந்த மஹா பாபியை உடனே வெட்டி விடும்படியாகக்கட்டளையிடும்.

சுபு. ஐயனே. அப்படியே, ஆயினும் கைதியின் வாக்குமூலத்தைக் கேட்க வேண்டுமல்லவா?—அப்பா, நீ யார்?

கோ. ஸ்வாமி! நாங்களென்ன உதைத்து வருத்திய போதிலும் ஒன்றுஞ் சொல்ல மாட்டேனென்கிறான், ஊமை யென்று நினைக்கப்போகிறீர்கள். ஸ்திரீகளை நம்பலாகாது என்று மாத்திரம் அடிக்கடிக் கூறிக்கொண்டே யிருக்கிறான்.

சுபு. அப்பா, உண்மையைக் கூறிவிடு. நீயேன் ராஜ குமாரனைக் கொன்றாய்? உனக்கும் அவருக்கும் ஏதாவது த்வேஷமுண்டோ? நீ நிஜத்தைக்கூறினால் நான் மஹாராஜாவிடம் சொல்லி உன்னுயிரைத் தப்புவிக்கிறேன்.

கோத். ஐயனே! அப்படி யொன்றுஞ் செய்யக்கூடாது, இவன் மஹா பாதகன். ராஜ குமாரரைக் கொன்றது மல்லாமல் ராஜ ஸ்திரீயையும் கையைப் பிடித்திழுத்தானும்.

புத். ஆ! "ஆலகால விஷத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்
கோலமா மதயானையை நம்பலாம்
கொல்லும் வேங்கைப் புலியையு நம்பலாம்
காலனார் விடு தூதரை நம்பலாம்
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று தியங்கித்தவிப்பரே."

கோத் அடே! கேட்டதற்குப்பதில் சொல்லாமல் பாட்டுப பாடுகிறாயா? [புடைக்கிறான்.]

புத். சுவாமி! நானுண்மையைக் கூறுகிறேன். இப்பாதகர்களுக்கு என்னை வருத்தவேண்டா மென்று சொல்லும்.

கோத். ஆ! அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும்.

சுபு. சேவகா, இவனுடையதளையை யவிழ்த்துவிடு, ஒன்றும் செய்யாதே. அப்பா, நீ யார்?

புத். அது உமக்கெனனத்திற்கு?

சுபு. ஓ!—அதிருக்கட்டும். ராஜகுமாரரை நீ கொன்றது உண்மைதானா?

புத். அல்ல வென்றால் என்னை நம்புவீர்களா?

கலி. அடே! என்ன அதிகமாகப் பேசுகிறாய்? நீ கொன்றாயா? இல்லையா?

புத். மஹாராஜா கோபித்துக் கொள்ளலாகாது. ராஜ குமாரரது அறையில் அக்காலத்தில் இருந்தவர்கள் ராஜ ஸ்திரீயும் நானுமே! அங்கு நான் என்ன காரணத்திற்காகச் சென்றேனென்று நான கூறப்போகிறதில்லை. அப்படிக் கூறுவதிற் பயனில்லை. ராஜ ஸ்திரீ கொன்றிராவிட்டால் நான் தான் கொன்றிருக்க வேண்டும்.

கலி. என்ன! என் குமாரத்தி தன் கணவனைக்கொன்றாளென்கிறாயா?

புத். அதை நான் சொல்ல மாட்டேன். ராஜகுமாரத்தி செய்திராவிட்டால் நான் கொன்றேனென்பதற்குத் தடையென்ன?

சுபு. அப்பா, நான் இன்னும் ஒரு முறைதான் கேட்பேன். உண்மையை இப்பொழுதாவது கூறுகிறுயா இல்லையா?

புத். ஐயனே, அவ்வளவே உண்மை.

சுபு. மஹாராஜா, இனி நாமென் செய்வது? தாங்கள் தண்டனைவிதிக்க வேண்டியது தான்.

கலி. அடா! பாதகா! என்னுடைய மருமகனைக் கொன்றதற்காகத் தலையை யிழக்கக்கடவாய்

புத். ஆ! ஆ! தெய்வமே! என் நண்பன் என்னை அற்பன் பொய்யன் என்று கூறியுதைத்ததையும் பொறுத்தேன், என் பிதா என்னை வீட்டைவிட்டுத்துறத் தியதையும் பொறுத்தேன் பொறுத்தேன்! ஐயோ! என் நண்பனிறக்க, அவனைக்கொன்ற பழி என்மீது சாற்றப்படுவதையும் பொறுப்பேனே?

சுபு. அரசே! இதில் ஏதோ விசேஷமிருக்கிறது!

மற்ற மந்திரிகள். மஹாராஜா, எங்களுக்கு மப்படியே தோற்றுகிறது.

புத். இனி அழுதுபயனில்லை. ஐயா! எவ்வளவு அற்பகைதியாயிருந்தபோதிலும் உயிரிழக்கும்படியாகத் தண்டிக்கப்பட்டபின் அவன் கேட்கும்படியானதைக் கொடுக்கவேண்டுமென்று ஒரு நியாயமுண்டல்லவா?

சுபு. ஆம், என்ன கேட்கின்றுய்?

புத். மஹாராஜா, எனக்கு மூன்றுநாள் கெடு கொடுக்கவேண்டும். அதற்குள்ளாக ஒருதினம் இரவு என்பின்னுக ஓரிடத்திற்குத் தாங்கள் வரவேண்டும்.

கோத். மஹாராஜா, அவ்வாறு செய்யலாகாது. இவன் மஹா திருடன்.

புத். மஹாராஜா, அப்படியல்ல. தாங்கள் மந்திரியுடன் ஆயுதபாணியாகவரலாம. என்மீது ஏதாவது சிறிதுசந்தேகமுண்டானுல் வழியிலேயே வெட்டிவிடும். இந்த ஒருவரம் மாத்திரம் தாங்களெனக்கருள வேண்டும்.

சுபு. மஹாராஜா, இதிலேதோ விசேஷமிருக்கிறது. அப்படியே தாங்கள் செய்யலாமெனத் தோற்றுகிறது.

மற்ற மந்திரிகள். எங்களுக்குமப்படியே தோற்றுகிறது மஹாராஜா!

கலி. ஆம்! ஏதோ விசேஷந்தானிருக்கிறது. அப்படியே செய்கிறோம் நாளைராத்திரிக்கு வருகிறோம்.

சுபு. அப்பா, இப்பொழுதாவது உண்மையைக் கூறமாட்டாயோ?

புத். தங்களுக்கெல்லாம் உண்மையைக் கூறப்போகிறதில்லை. நான் உண்மையைக் காண்பிக்கப்போகிறேன்.

[கொத்தவால் புத்திசேனனை அழைத்துச் செல்கிறான்.]

காட்சி முடிகிறது.

எட்டாம் காட்சி

(இடம்:—பானுமதியின் அறை.

பானுமதி ஒரு நிருபத்தைப் படித்தவண்ணம் வருகிறாள்.

பானு என்னுடைய பிராணநாதர் நாட்டை விட்டு தேசசஞ்சாரம் செய்கிறதாக என்னுடைய பிதா எழுதியிருக்கிறார். என் பிராணநாதர் என்னைப்பார்ப்பதற்காக ஒருகால் இவ்விடம் வருவாரோ? வரமாட்டாரோ? நான் அறிகிலேன். நான் அவரை எனக்கு விவாகமாகிய பொழுது கண்டேனே, அவ்வளவுதான். அதற்கப்புறம் நான் காணவேயில்லை. இப்பொழுது எவ்வாறிருக்கிறாரோ? பிராண நாதா, நான் உம்மைக்கனவிலும் மறவாது நினைத்துக் கொண்டிருக்கிறேனே; நீர் எப்பொழுதாவது என்னைக்குறித்து நினைக்கிறீரோ? ஐயோ! நான் எனது யௌவனத்தை எனது கணவனுடன் கூடி சுகித்துக் கழிக்காது வீணாகக் கழிக்கிறேனே! தேவி! தேவி!—

நம்முடைய செயலாலென்ன விருக்கிறது? எல்லாம் தெய்வச்செயல்! அம்பிகா! என் கொழுநனுடன் என்னை நீ தான் சீக்கிரத்திற்சேர்த்துவைக்க வேண்டும்! அப்படி அடைவேனுனல் எனது நாதனைக்கூடி நான் சுகிப்பதற்கு முன், எந்தக் கரத்தால் அவரைக்கட்டி இன்பமனுபவிக்கக் கருதுகிறேனே, அக்கரத்தையே உனக்குப் பலியாகக் கொடுத்து விடுகிறேன். எல்லாம் உனதருள்!

[ஒரு தோழி வருகிருள்.]

தோ. அம்மா! பிதா ஊரிலிருந்து வந்திருக்கிருர். உம்மை அழைத்துவரச் சொன்னுர்

பானு. அப்படியா! இதோ வந்து விட்டேன்.

[போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

ஒன்பதாம் காட்சி

இடம்:—கலிங்கத்து மன்னன் தர்பார்.

கலிங்கத்து மன்னன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிருர்.
சுபுத்தி முதலிய மந்திரிகள் இருபுறமும் இருக்கின்றனர்.
கோத்தவால் ஒருபுறமாக நிற்கிருன்.

கலி. மந்திரீ! நாம் என்ன தப்பிதஞ்செய்ய விருந்தோம், ஒரு குற்றமில்லாத ஒரு பெரிய மஹரிஷியைக் குற்றவாளியாக்கிச் சிரச்சேதஞ்செய்து தீராப்பழியைப் பெற இருந்தோமல்லவா? அம்மஹரிஷி நேற்றைத்தினம் இரவு என்னை யழைத்துச் சென்று பிரத்தியக்ஷமாகக் காட்டியிரா விட்டால், நான் சண்பகமாலை தன் கணவனுக்குத் துரோகி என்றும், சந்திரவதனனைக் கொன்றவளவளே யென்றும், தேவர்கள் கூறிய போதிலும் நம்பியிருக்க மாட்டேன் அல்லவா? ஆ! என்ன ஆச்சரியம்!

சுபு ஐயனே, எனக்கு இவ்விஷயத்தைக் குறித்து முதலி லேயே சந்தேகமாகவே யிருந்தது. பாபம் ஒருபக்க மிருக்க பழி யொருபக்க மிருந்ததல்லவா?

புத்திசேனன் வருகிறான்.

[எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்.]

கலி. ஸ்வாமி! இங்குவந்து எனதருகில் தாங்கள் உட்கார வேண்டும். [புத்திசேனன் உட்காருகிறான்.] சுபுத்தி, இம்மஹானுபாவரின் மீது பழிசாற்றிய கொடி யவள் என் குமாரத்தி யல்ல வென்றே நினைக்கிறேன். என் குமாரத்தியா யிருப்பாளானால் அப்படிப்பட்ட கொடுஞ் செய்கையை யுடைத்தாயிருப்பாளா? தன் கணவனுக்குத் துரோகஞ் செய்து, அவனைக்கொன்ற இக்கொடும்பாவிக்கு, என்ன தண்டனை விதிக்கலாம்?

சுபு. மஹாராஜா, உயிர்க்குயிரை வாங்குதலே முறைமை.

கலி. ஆம்! கொத்தவால்! உடனே சென்று சண்பக மாலையை யாரென்றும் பாராமல் சிரச்சேதம் செய்துவா, போ! [கொத்தவால் போகிறான்] மந்திரி, நம்முடைய கண்களை விளக்கிய இம்மஹாரிஷிக்கு நாமென்ன கைம்மாறு செய் யப் போகிறோம்?

சுபு. ஸ்வாமி, தேவரீர் நாங்கள் அறியாது செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். எங்களை மீளா நரகத்தினின் றும் மீட்டருளிய உமக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்? தாங்கள் எதைக் கேட்ட போதி லும் தர மஹாராஜா சித்தமாயிருக்கிறார். தாங்கள் ஏதாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

புத். மந்திரி, எனக்கென்ன வேண்டியது?

சுபு. அப்படி யல்ல, ஏதாவது பெற்றுக்கொள்ள வேண்டும், இல்லா விட்டால் எங்கள் மனத்திற்குத் திர்ப்தியாயிராது.

புத். அப்படியானால், மஹாராஜா, தங்களுடைய மருமகனைத் தகனஞ் செய்யாது ஒரு பெட்டியில் அடக்கஞ் செய்து, என்னிடம் ஒப்புவிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

கலி. அதற்குத்தடையென்ன? அப்படியே ஆகட்டும்.

சுபு. மஹாராஜா, இந்த ரிஷியிடம் ஒப்புவித்தால் உம்முடைய மருமகன் உயிர் பெறுவாரென்று எனக்குள் ஏதோ தோன்றுகிறது.

கலி. ஏதோ பார்ப்போம்; இறந்தபின் உயிர்பெறுவது ஈசன் செயலாகும். ஆயினும்—

புத். அவர் மனம்வைத்தால் ஆகாததொன்றுண்டோ? எனக்குப் போக விடையளியும்.

[புத்திசேனன் போகப்புறப்பட, மஹாராஜா முதலியவர்கள் எழுந்து வணங்குகிறார்கள்.]

காட்சி முடிகிறது

மூன்றாம் அங்கம்

முதற் காட்சி

இடம்:—நகுலராஜன் அரண்மனையில் ஓர் அறை.

நகுலராஜன் ஆசனத்தில் வீற்றிருக்கிறார்.
விதூஷகர் ஒரு புறமாய் உட்கார்ந்திருக்கிறார். சுமந்திரர் நகுலராஜன் பக்கலில் நிற்கிறார். ஒரு தூதன் வாயிலருகில் நிற்கிறான்.
சேவகர்கள் இருபுறமும் நிற்கின்றனர்.

ந. ஆ! மந்திரி! உம்முடைய வார்த்தையைக் கேளாதபடியினாலல்லவா இவ்வளவு துயரம் நேரிட்டதெனக்கு? ஆ! அன்றே உம்முடைய சொற்படி எனது குமாரனை அவனுடைய நண்பனிடமிருந்து பிரிக்காமலிருந்திருப்பேனாயின், இப்பொழுது என் குமாரன் இறந்திருக்க மாட்டானே! கெடுமதி கண்ணுக்குத் தோற்றாதல்லவா?

சும. மஹாராஜா, நாமினி என்ன செய்பலாம்? இப்பொழுது நாம் வருந்தி என்ன பயன்? விதியை மதியால் வென்றார் ஒருவருமில்லை. எல்லாம் தெய்வத்தின் செயல்.

ந. சுமந்திரரே, நானெண்ணிய எண்ணங்களெல்லாம் வீணாய்ப் போயினவே, நான் இப்பொழுது பிள்ளையில்லாத பாவியானேனே!

சும. மஹாராஜா, தாங்கள் இவ்வாறு எண்ணுவதற்குக் காரணமில்லை யென்றே எனக்குத் தோற்றுகிறது. கலிங்க தேசத்தரசன் எழுதிய கடிதத்தில், இளவரசருடைய உடலை யாரோ ஒரு வயதிற் சிறியவரும் தவத்திற் பெரியவருமாகிய மஹரிஷி எடுத்துச் சென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. அம்மஹரிஷி சந்திரவதனனை உயிர்ப்பிப்பதற்காகவே இவ்வாறு செய்திருக்க வேண்டும். ஆதலால் எப்படியும் தம்முடைய குமாரர் பிழைப்பார் என்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை.

விதூ. ஆம்! ஆம்! அரசே, எனக்கு மப்படித்தான் தோற்றுகிறது. அதுவுமன்றி அந்தத் தபசி நம்முடைய மந்திரியினுடைய குமாரனென்றுந் தோற்றுகிறது. ஏனெனில்—

ந. விதூஷகரே! போதும் வாயை மூடும். இன்னொரு முறை இவ்வாறு ஏதாவது விகடமாகச் சொல்வீராகுல் உம்மைச் சிரச்சேதம் செய்யும்படிக்கட்டளை யிடுவேன்!

[விதூஷகர் போகிறார்.]

தூதனே, நீயுன் தேசத்திற்குப்போ; நானிக்கடிதத்திற்குச் சீக்கிரத்தில் பதிலெழுதுவதாகச் சொல் அரசரிடம்.

தூத. அப்படியே மஹாராஜா. [போகிறான்.]

ந. மந்திரி, என்ன சொன்னீர்? என் குமாரன் உயிர் பெறவா போகிறான்? இறந்தவன் எப்பொழுதாவது உயிர் பெற்றதுண்டா?

சும. அரசே, அப்படியல்ல கடவுளினது கிருபையிருக்குமாயின் எதுவும் அசாத்தியமன்று. ஜோதிஷ நூற்களெல்லாம் பொய்யாகுமோ? ஜோதிஷத்தில் சிறந்த பெரியோர்களெல்லாம் சந்திரவதன ராஜன் உமக்குப் பிற்காலம் இந்நாட்டை ஆள்வாரென்று கூறியது பொய்யாமோ?

ந. நான் நம்புவில்லை.

சே. மஹாராஜா, தனபால செட்டியின் குமாரத்தி தங்களைப் பார்ப்பதற்காக வருகிறார்கள்.

ந. மந்திரி, அக்கொடிய செட்டியை நான் கொலை செய்து வரும்படியாகக் கூறினேனே, இன்னும் செய்ய வில்லையோ?

புஷ்பவல்லியும் தோழியும் வருகிறார்கள்.

புஷ். அபயம்! அபயம்! மஹாராஜா! நீரே எனக்குக்கதி! வேறொரு துணையுமில்லை. உலகெலா மாளும் சக்ரவர்த்தியே! இங்கு நியாய மில்லையோ? நீதியில்லையோ! இதுவோ உம்முடைய செங்கோல் செலுத்து முறைமை? ஐயோ! ஏன் என்னுடைய பிதாவைக் கொலை செய்யும் படியாகக்கட்டளை யிட்டீர்? அவர் என்ன குற்றஞ் செய்தார்? ஐயோ! நீர் தானே என் பிதாவை இளவரசர் புத்திசேனனாகிய இருவருடைய நட்பைப்பிரிக்கும்படியாகக்கட்டளை யிட்டீர்! மஹாராஜாவின் உத்தரவுபடி நடந்ததற்கோ அவர் உயிர் இழக்க வேண்டும்! ஐயனே, இதுவோ நீதி? என் தந்தையைச் சிறைச்சாலையிலிடும் படியாகக்கட்டளை யிட்டீராமே. என்ன காரணம்பற்றி இவ்வாறு செய்தீரோ நானறியேன்! மஹாராஜா! சற்று முன்பாக இளவரசர் திரும்பி வருவராயின் சிறையினின்றும் விடுவிப்பதாகக்கூறினீரே; உம்முடைய குமாரர் எப்படியும் வருவார். ஆகவே—

ந. ஹா! என் குமாரனை இனி நான் உயிருடன் காணப்போகிறேனோ?

புஷ். ஆம்! அதற்குச் சிறிதும் தடையில்லை. அப்படி வராவிட்டால், நீர் என்னுடைய உயிரையே கொள்ள வேண்டும். ஏனெனில், நானே அவர்களுடைய நட்பைப்பிரித்தவள். மஹாராஜா! எவ்வாறாவது என் மீது கருணை புரிந்து என் தந்தையின் உயிரை எனக்குப் பிச்சையாகத்தந்தருளவேண்டும்.

சும. அரசே, என் புத்தியிலும் ஏதோ உம்முடைய குமாரர் மீண்டும் உயிருடன் வருவாரென்றே தோற்றுகிறது.

அப்படித் தோற்றுவதற்குக் காரணம் என்றால் சொல்ல முடியாது. ஆதலால் இப்பெண்ணின் மீது கருணை புரிந்து, தாங்கள் தனபால செட்டியைக் கொலை செய்யாதிருக்கும்படி மீண்டும் கட்டளையிட வேண்டும்.

ந. ஏதோ பார்ப்போம்! உன்னுடைய தந்தையினுயிரை உனக்குத்தானமாகத் தந்தேன். ஆயினும் உன் தந்தை சிறையிலேயே யிருக்கவேண்டும். எந்த தினம் எந்த நிமிஷம் என் குமாரன் என் கண் முன்பாக வருகிறானோ, அந்த நிமிஷமே உன் பிதாவை நான் சிறையினின்றும் விடுவிக்கிறேன், போ!

புஷ். எல்லாம் தங்களுடைய கருணை! நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

[புஷ்பவல்லியும் தோழியும் போகிறார்கள்.]

ந. ஹா! இறந்த என் குமாரன் மறுபடியும் உயிர் பெற்று வரப் போகிறானோ!

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்:—ஓர் பள்ளியறை.

புத்திசேனன் வருகிறான்.

புத். ஆ! நான் பிறந்ததென்ன! வளர்ந்ததென்ன! இளவரசருடன் நட்புக்கொண்டதென்ன! அந்த நட்பினின்றும் பிரிக்கப்பட்டதென்ன! காட்டிலுழன்றதென்ன! நானிப்போது எந்த ஸ்திதியிலிருக்கிறேன்! என்ன ஆச்சரியம்! உம்!—என்னுடைய பிதாவுக்கு சந்திரவதனனை எப்படியாவது அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி வந்தேனே! என் நண்பனெங்கிருக்கிறான்? என் தோழனுடைய பிரேதம் அதோ அப்பெட்டியிலிருக்கிறது! இறந்

தவன் மறுபடியும் உயிர் பெறுவானே? ஆயினும்— ஓஹோ! என் மனைவி வருகிறாள் போலும்! நான் பானு மதியைச் சிறுவயதில் கண்டது; இப்பொழுது எவ்வாறி ருக்கிறாளோ? எல்லாவற்றையும் நான் உறங்குகிறாற் போலிருந்து கண்டறிகிறேன்.

[படுக்கையின் மீது படுத்து நித்திரை செய்வது போல் பாசாங்கு செய்கிறான்.]

பானுமதி வருகிறாள்.

பா. ஆ! ஆ! இவரோ என் கணவன்? என்னை ஐந்து பிராயத் தில் விவாகஞ் செய்துகொண்டவர் இவ்வளவு வடிவழ குள்ள புருஷனுவாரென்று நான் கனவிலும் நினைக்க வில்லை. இத்தனை சௌந்தரியமுள்ள கொழுநனைப் பெறு தற்கு நான் பூர்வ ஜன்மத்தில் என்ன புண்ணியம் பண்ணி னேனோ?—அருகிற்செல்ல என்ன லஜ்ஜையாயிருக்கிறது. ஓஹோ! அயர்ந்து நித்திரை செய்கிறார்போல் இருக்கி றது. இவரை இப்பொழுது நான் எழுப்பவா? அல்லது— ஓ! எழுப்புவோமாகில் இவர் நம்மைக் கூடிச் சுகிக்கச் கருதுவார். அதற்கு முன்பாக நான் செய்துகொண்ட பிரதிக்ஞையை முடித்துக்கொள்ளவேண்டும். இதுதான் சமயம். விழித்துக்கொள்ளுவதற்கு முன்பாக நான் போய் வருகிறேன். [போகிறாள்.]

புத். [எழுந்திருந்து] ஓ! ஓ! என் நண்பனுக்குத்தான் அக்கதி வாய்த்ததென்று பார்த்தால், எனக்கும் அந்தக்கதி தான் போலிருக்கிறதே! ராஜஸ்திரீயினுடைய தங்கைதான்! ராஜஸ்திரீ ஒரு தட்டுமாத்திரம் எடுத்துச் சென்றாள். பானுமதி ஒரு பாத்திரங்கூட எடுத்துக்கொண்டு போ கிறாள் போலிருக்கிறது! இதுவும் என்னுடைய தலைவிதி தான். என் செய்வது? பின் தொடர்ந்து சென்று இதனுண்மையையும் கண்டறிவோம்.

[பின்தொடர்கிறான்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்:—அதேயிடம்.

புத்திசேனன் திரும்பி வருகிறான்.

புத். ஆ! ஆ! என்ன ஆச்சரியத்தைக் கண்டேன்! ஸ்திரீ யென்றால் பானுமதியையே ஸ்திரீயென்று சொல்ல வேண்டும். இவ்வளவு கற்புடைய மனைவி எனக்கு வாய்த்தது, நானும் எனது முன்னோர்களும் அநேக ஜன்மங்களிற் செய்த பூஜாபலனென்றே சொல்லவேண்டும்! ஆ! பானுமதி அருந்ததியினும் அதிக கற்புடையவளாக விருக்க, துர்நடத்தை யுடையவளென்று நான் சற்று முன்பு கருதியது எவ்வளவு தப்பிதம்? இந்த அபராதத்திற்கு நான் என்ன செய்யப்போகிறேன்? நான் தன்னிடம் வந்ததற்காக, எக்கரத்தினால் என்னைத் தழுவிச் சுகிக்கப்போகிறாளோ, அக்கரத்தைத் தான் முன்புசெய்த பிரதிக்ஞையின்படி அம்பிகைக்கு பலியாகக் கொடுக்கச் சென்ற மாது சிரோமணியை, நான் கெட்ட நடத்தை யுடையவளாய் என்னை விட்டுத் தனது ஆசை நாயகனிடம் செல்கிறாளென்றல்லவோ தவறாக நினைத்தேன்! ஆ! அம்மஹரிஷி கூறியதினுண்மையை இப்பொழுதே கண்டேன்! பானுமதியோ காளிகாதேவியினனுக்கிரகத்தால் வலக்கையும் அறுபடாமல், அக்கையினால் பரிசித்தால், பட்டமரம் தளிர்க்கவும் செத்த உடல் உயிர்க்கவும் வரம் பெற்றிருக்கிறாள்! ஆதலால் என் மனைவியாகிய அப்பதிவிரதா சிரோமணியால் எனது நண்பனை உயிர் பெறும்படியாகச் செய்விக்கிறேன்! ஒருவாறு என் நண்பனுக்கு வந்த துன்பம் என்னாலேயே நீங்கப் போகிறதல்லவா!—ஓஹோ! பானுமதி காளிகோயிலிலிருந்து திரும்பிவருகிறாள் போலிருக்கிறது. நான் இன்னும் உறங்குகின்றாற் போலிருக்கிறேன். என்ன நடக்கிறதோ சற்றுப்பார்ப்போம்.

பானுமதி வருகிறாள்.

பா. இன்னும் அயர்ந்து தூங்குகிறார்; பிரயாணம் வந்த சிரமம் போலிருக்கிறது. நாமிப்பொழுது பிராணநாதரை எழுப்பலாமோ? பஞ்சணையைச் சற்று அசைத்துப் பார்க்கிறேன்.—இப்பனி நீரைத் தெளித்துப் பார்ப்போம்—இதிலும் எழுந்திருக்கவில்லை—கொஞ்சம் பாடுகிறேன்—அதிலாவது எழுந்திருப்பாரோ?

[பாடுகிறாள்.]

புத். ஆ! பெண்ணே, வா இப்படி, உட்காரா—என்ன சமாசாரம்?

பா. ஒன்றுமில்லை.

புத். ஏன் இவ்வளவு நேரமாயிற்று?

பா. பிராண நாதா—சற்றுக் காலதாமத மாயது—மன்னிக்க வேண்டும்.

புத். அதிருக்கட்டும் பெண்ணே, உனக்கென்று நான் தூரதேசங்களிலிருந்தும் கொண்டுவந்த வஸ்துக்களைப் பார்க்க வேண்டுமென்று உனக்கு ஆசையில்லையோ?

பா. ஆம், பிராண நாதா.

புத். அதோ யிருக்கிறதே பெட்டி, அதனுள் ஒரு சிறந்த வஸ்து இருக்கிறது எடுத்துவா.

[அவள் சென்று பெட்டியைத்திறந்து கரத்தால் உள்ளிருக்கும் சந்திரவதனன் உடலைத்தீண்ட அவன் உயிர் பெற்றெழுகிறான். உடனே திடுக்கிட்டு ஒதுங்குகிறாள்.]

பா. பிராண நாதா! இதென்ன இது?

புத். கண்ணே, பயப்படாதே, ஒன்றுமில்லை நான் உனக்கு அப்புறம் எல்லாந் தெரியச் சொல்லுகிறேன. நீ உள்ளே சென்று உணவு சித்தம் செய்துவை. இவர் எனது பிராண சிநேகிதர். போ சீக்கிரம்.

[பானுமதி போகிறாள்.]

சந். [பெட்டியைவிட்டு வெளிவந்து] இது என்ன விது? நான் எங்கே யிருக்கிறேன்? நான் தூங்குகிறேனோ? விழித்துக் கொண்டிருக்கிறேனோ?

புத். விழித்துக் கொண்டுதா னிருக்கிறீர்.

சங். ஆ! புத்திசேனு! நண்பா, நான் கனவுகாண்கிறேனே! என்னைக் கிள்ளு பார்ப்போம்.

புத். நண்பனே, இல்லை இல்லை. இது நினைவுதான்.

சங். புத்திசேனு! நானிப்பொழுது எங்கே யிருக்கிறேன்? இது யார் வீடு? நானிங்கு எவ்வாறு வந்தேன்? ஆ! நண்பா! மஹா பாவியாகிய நான் உன்னைத்தூஷித்து—

புத். இளவரசே, அதைப்பற்றி இப்பொழுது ஏன் பேசுகிறீர்? உள்ளே வாரும். போஜனம் செய்தபிறகு எல்லாந் தெரியும்படி உமக்கு நான் சொல்லுகிறேன், வாரும்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி.

இடம்:—சுமந்திரர் வீட்டில் ஓர் அறை.

சுமந்திரர் வருகிறார்.

சும. சீ! சீ! அரசர்களுடன் சகவாசஞ் செய்வதினால் வரும் தீமை யிதுதான். மஹாராஜா என் வார்த்தையை அப்பொழுதே கேட்டிருப்பாராயின்—ஐயோ! இவ்வளவு தீங்கும் நேரிட்டிருக்காதே! இப்பொழுது அதைக் குறித்து யோசித்து என்னபயன்? இனி நான் என் குமாரனுடைய முகத்தைக்காணப் போகிறதில்லை. புத்திசேனன் மிகவும் மான முடையவன்; இளவரசரை அழைத்து வந்தாலொழிய இவ்வழியாக வரவேண்டா மென்று மஹாபாபியாகிய நான் கட்டளையிட்டு விட்டேன். இளவரசரோ இறந்து விட்டார். இதைக் கேட்டவுடன் என் குமாரன் தனதுயிரையும் விடுவானே யொழிய இங்கு வரப்போகிற தில்லை. ஆ! அப்பா!

புத்திசேனா! என் கண்மணியே! நான் உன்னை இப்பாவிகளுக்கு இரையாக்கினேன்! ஐயோ! நான் உன் பிதாவாயிருந்தும் எவ்வளவு க்ரூர மனமுடையவனாய் உன்னை வீட்டினின்றும் துரத்திவிட்டேன்! நீ எங்கு உன் நண்பனைத்தேடி அலைகிறாயோ? இப்பொழுது நான் உன்னைப்பிரிந்து உயிர் வாழ்வேனோ?

புத்திசேனன் சன்னியாசி யுடையில் வருகிறான்.

ஓ! இதுயார்? ஸ்வாமி வாரும். உட்காரும். தாங்கள் யாரோ எனக்குத் தெரியவில்லை.

புத். நான் ஒரு தபசி! ஒருகாரணமாக இங்குவந்தேன். நீர் தானோ இத்தேசத்து மந்திரி?

சும. ஆம் ஸ்வாமி.

புத். நீர் ஏதோ வருந்தி யிருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன். உமக்கு என்ன வேண்டும்? கேளும் தருகிறேன்.

சும. அப்படியா! சுவாமி, எனக்கென்னவேண்டும்? எப்படியாவது என் குமாரனாகிய புத்திசேனனை நான் காண வேண்டும்.

புத். அப்படியே தந்தோம். உமக்கு முன்பாக இருக்கிறான் பாரும்.

சும. எங்கே?

புத். ஐயனே! என் குரலினாலாவது என்னைக் கண்டு பிடிக்கலாகாதா? [வேஷத்தை களைகிறான்.]

சும. ஆ!—புத்திசேனா! [ஆலிங்கனம்செய்து கொள்ளுகிறார்.]

புத். ஐயனே, நான் இவ்விடத்தை விட்டுப் போகும்போது இளவரசரை எப்படியும் கொண்டு வருகிறேனென்று சொல்லிவிட்டுச் சென்றேனல்லவா?

சும. சந்திரவதனன் இறந்து விட்டானே! நீ எப்படி அவனை அழைத்துவரப் போகிறாய்?

புத். ஐயனே, என்வார்த்தை நான் தவறுவேனோ?

சும. என்ன! என்ன! இளவரசரை உயிருடன் கொண்டுவந்திருக்கிறாயா?

புத். ஆம்! மஹாராஜாவினிடம் உயிருடன் ஒப்புவித்து விட்டுத்தான் வந்தேன்.

சும. ஆ! இறந்தவன் உயிர்பெற்றானே? புத்திசேனா! இது உண்மைதானா? எனக்குத் தெரியும்படி எல்லாம் விவரித்துக் கூறுவாய்.

புத். தந்தையே, உண்மைதான். நான் பொய்பேசுவேனா? ஆயினும் இதைப்பற்றித் தாங்கள் என்னை ஒன்றுங் கேட்கலாகாது. இப்பொழுது நானுங்களை ஒரு விஷயம் வேண்டிக் கொள்ளுகிறேன். இன்றைக்கு மூன்றாம் நாள் காலை, மஹாராஜா கொலுமண்டபத்தில் ஒரு பெரிய தர்பார் வைக்க வேண்டும். அதற்கு எல்லோரையும் வரவழைக்க வேண்டும். கலிங்கதேசத்தரசரும் வரவேண்டும், தாங்களும் வரவேண்டும், நான் அந்த சபையில் எல்லாம் விளங்கச் சொல்வேன். இப்பொழுது என்னை ஒன்றுங் கேட்கலாகாது.

சும. அப்படியே, அதற்கென்ன, ஆயினும்.—

ஒரு சேவகன் வருகிறான்.

சேவ. ஸ்வாமி! மஹாராஜா உம்மைக் கையுடன் அழைத்துக் கொண்டு வரச்சொல்லினார். இளவரசர் உயிருடன் அரண்மனைக்கு வந்திருக்கிறாராம். சீக்கிரம் வாரும்.

சும. அப்பனே! நீ கூறியது உண்மைதான்—இதோ வந்து விட்டேன்.

[போகிறார்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி

இடம்:—தனபால செட்டியார் வீட்டில் ஓர் அறை.

புஷ்பவல்லி உட்கார்ந்திருக்கிறாள். தோழி அருகில் நிற்கிறாள்.

விதூஷகர் ஒரு புறமாய் உட்கார்ந்திருக்கிறார்.

விதூ. அம்மணி, நான் முன்பே சொல்லினேனல்லவா? நான் திரி கால வர்த்தமானங்களும் தெரிந்தவ னாயிற்றே! உம்முடைய பிதா நாளைக்குச் சிறையினின்றும் விடுவிக்கப் படுவார்.

புஷ். ஆனால், ஐயா! எனது பிராணநாதர்—இளவரசர் உயிருடன் ஊருக்குத் திரும்பி வந்தது உண்மைதானே?

விதூ. ஆம் ஆம்! உண்மைதான். மந்திரியினுடைய குமாரர் நேற்றைத்தினம் தான் அரண்மனைக்கு அழைத்து வந்தார்.

புஷ். [ஒருபுறமாக] ஆ! மனமே! சற்றுப்பொறு! அவசரப் படாதே.

விதூ. நாளைத்தினம் மஹாராஜாவி னரண்மனையில் ஒரு பெரிய தர்பார் நடக்கப்போகிறது; அதற்குத் தங்களைத் தவறாமல் அழைத்து வரும்படி மந்திரி குமாரர் மஹாராஜாவைக்கேட்டுக்கொண்டார், இவ்விஷயங்களை யெல்லாம் உமக்குக் கூறி மஹாராஜா உம்மைத் தப்பாமல் வரும்படிக்கட்டளையிட்டிருக்கிறார்.

புஷ். ஐயா! நான் மஹாராஜாவின் சபைக்கு வரவேண்டிய காரணமென்ன?

விதூ. அம்மா, அது எனக்குத் தெரியாது. அரசரது கட்டளைப்படி நான் சொல்லிவிட்டேன். நான் போய் வருகிறேன்.

[போகிறார்.]

புஷ். தோழி, என்ன காரணத்திற்காக நான் மஹாராஜாவின் சபைக்கு வரவழைக்கப்பட்டேனென்று நினைக்கிறாய்?

தோ. அம்மா, எனக்கு ஏதோ ஒருகாரணம் மனத்தில் படுகிறது, கோபித்துக்கொள்ளாத பட்சத்தில் நான்சொல்லுகிறேன்.

புஷ். என்னுயிர்த் தோழியே! உன்மீது எனக்கென்ன கோபம் வரப்போகிறது? ஒன்றும் பயப்படாமற் சொல்.

தோ ஆனால் நாளைக்கு நீர் இளவரசரை மணம்புரிவீரென்று தோற்றுகிறது.

புஷ். தோழி, என்ன பரிகாசஞ் செய்கிறாயோ? நானோ ஒரு செட்டிப்பெண், இளவரசர் என்னை மணம் புரிவாரென்று நான் கனவிலும் நினைக்கத் தக்கதல்லவே! ஆயினும் தோழீ! தோழீ! என் மனம் அவரையே நாடுகிறது. நான் அவரைப்பெறாவிடின் உயிர் விடுவேன்.

தோ. அம்மணி, நீர் வருந்தவேண்டாம்; என் வார்த்தையைப் பாரும். [ஒரு தூதன் வருகிறான்.]

தூ யாரம்மா இம்மாளிகையில்? தனபால செட்டியிடமிருந்து கடிதங்கொண்டு வந்தேன். இங்கே புஷ்பவல்லியம்மாள் யார்?

புஷ். நான் தான்! தோழி தோழி! அக்கடிதத்தைச் சீக்கிரம் வாங்கு.

தோ. சரிதான் போ.

[கடிதத்தைக் கொடுத்து விட்டு தூதன் போகிறான்.]

புஷ். [நிருபத்தை தோழியிடமிருந்து வாங்கிப் படித்துப்பார்த்து] ஆ! இதென்ன ஆச்சரியம்! தோழி! பிதா எழுதிய கடிதத்தைக் கண்டாயா?

தோ. என்ன எழுதிருயிக்கிறார்?

புஷ். இதோ படிக்கிறேன் கவனமாய்க்கேள். "அம்மா, புஷ்பவல்லி, நான் இப்பொழுது ஒரு முக்கியமான விஷயந் தெரிவிக்கப்போகிறேன், இதை முன்பே தெரிவிக்காததற்காக என்மீது கோபிததுக் கொள்ளலாகாது. இதுவரையில் நீ என்னை உன்னுடைய பிதாவென்று எண்ணியிருந்தா யல்லவா? ஆச்சரியப்படவேண்டாம்! நான் உன்னுடைய பிதாவல்ல! உன்னுடைய பிதா கலிங்கதேசத்

தரசரே! நீயே அந்நாட்டரசரது உண்மையான புதல்வி! உன்னிடத்தில் எனக்கிருந்த அன்பினுலும், எங்கே இவ்விஷயத்தை வெளியிட்டால் உன்னை அம்மன்னவர் அழைத்துக்கொண்டுபோய் விடுவாரோ என்னும் பயத்தி ஞலும், நான் இது வரையில் இவ்விஷயத்தை வெளியிடா திருந்தேன். நீ ஒரு சிறு குழந்தையாய் அரசன் அரண் மனையில் வளர்ந்து வந்தபொழுது, சிறு குழந்தைகளைத் திருடி விற்று ஜீவனம் செய்யும் சில கள்வர்கள், என்புதல் வியைத்திருடி, அங்கே விற்று, உன்னைத்திருடி என் மனை யாளிடம் விற்று விட்டார்கள். இவ்விஷயங்களெல்லாம் கலிங்கதேசத்து அரசர் இப்பொழுது என்னை நேரில் விசாரித்துத் தெரிந்து கொண்டார். அவர் உடனே தன் குமாரத்தியாகிய உன்னைக்காண வருவார்.''

[மூர்ச்சையாகிருள்.]

தோ ஓஹோ! நம்முடைய தலைவி சந்தோஷத்தினுல் மெய்ம் மறந்தாள் போலும். இப்பனிநீரைத்தெளித்து மூர்ச் சை தெளிவிப்போம்!—அம்மணீ! அம்மணீ!

புஷ். [தெளிந்து] தோழி, நான் கனவு காண்கிறேனு என்ன?

தோ. இல்லை! இல்லை! அம்மா, இவ்வளவும் உண்மைதான் நானும் உம்மைக்கண்ட நாள் முதல் நீங்கள் ராஜ புத்திரி யாகவே யிருக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். இல்லா விட்டால் ரதியை வென்ற அழகுடைய நீர் செட்டியின மகளாக எவ்வாறு பிறந்திருக்கக்கூடும்?

புஷ். இன்று நான் எழுந்த வேளை என்ன வேளையோ? நன்மை யின் மேல் நன்மையாகச் சம்பவிக்கிறதே? நான் ராஜ புத்திரியோ? கலிங்க தேசத்து மஹாராஜா என்னு டைய பிதாவோ? ஆனல் நான் இழிகுலத்திலுதித்தவ ளல்லவே? நான் இளவரசர் மீது காதல் கொண்டது முறைதானே?

தோ. ஆம்! அதற்குச் சந்தேகமென்ன? இதோ உம்முடைய பிதா வருகிருர் போலிருக்கிறது.

கலிங்கத்து மன்னன் விதூஷகர், பரிவாரங்கள் சூழ வருகின்றனர்.

விதூ. மஹாராஜா, அதோ உம்முடைய புதல்வி புஷ்பவல்லி.

கலி. ஆ! என் கண்மணியே! குழந்தாய்! [கட்டியணைத்து] நீ எத்தனை நாள் என்னிடமிருந்து பிரிக்கப்பட்டாய்!

தோ. ஐயோ! புஷ்பவல்லி சந்தோஷத்தினால் மூர்ச்சையாயினாள். இம்மெத்தையின் மீது வளர்த்தும்.

கலி. ஆம்! ஆம்! இவள் என் குமாரத்தி என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. இதோ கையில் நான் சிறு வயதில் கண்ட மச்சம்! என்னுடைய குமாரத்தி செட்டியின் வீட்டில் இனி யிருப்பது நியாயமல்ல. அப்படியே அசையாது அரண்மனைக்கு எடுத்துச் செல்வோம். அங்கே சைத நியோபசாரஞ் செய்தால் உடனே மூர்ச்சை நீங்குவாள் உடனே எடுத்துவாருங்கள் ஜாக்கிரதையாய்.

காட்சி முடிகிறது.

ஆறும் காட்சி

இடம் — நகுலராஜன் தர்பார்.

நகுலராஜன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்; அவர் வலதுபுறம் கலிங்கத்து மன்னன் வீற்றிருக்கிறார்; அவர் பக்கலில் **புஷ்பவல்லி** நிற்கிறாள் சந்திரவதனனும் சுமந்திரனும், இடதுபுறமாக உட்கார்ந்திருக்கின்றனர்; மந்திரிகள் இருபுறமும் நிற்கின்றனர்; **விதூஷகர்** ஒருபுறமாக உட்கார்ந்திருக்கிறார்; **பானுமதி** தாதியருடன் ஒருபுறமாக நிற்கிறாள்; **புத்திசேனன்** நகுலராஜனுக் கெதிர் நிற்கிறான்.

ந. அப்பா, புத்திசேனா, நானும் இச்சபையோரும் களிக்க நடந்த விர்த்தாந்தத்தை யெல்லாம் ஆதியோடந்தமாகக் கூறுவாய்.

புத். நகுலமகாராஜாவே! கலிங்கதேசத்துக்கோவே! பிதாவே! சபையோர்களே! நான் இச்சபையை இங்குகூட்டிவைத்தது, நடந்த விஷயங்களை யெல்லாம் எல்லோருக்குந்தெரியப்படுத்தும் படியாகவே நான் இப்பொழுது கூறப்போகிறதைச செவிசாய்த்துக் கேட்பீர்களென்று கோருகிறேன். மஹாராஜா அவர்கள் இளவரசரை முடிசூடும்

படி கேட்க, அவரிசையாமையால், அப்படி இசையாமைக்குக் காரணம் நானே யென்று நினைத்து, எங்களிருவருடைய நட்பைப்பிரிக்கவேண்டி, இதோ நிற்கும்படியான தனபால செட்டியை ஏவியதும், அச்செட்டியினுடைய மகளென்று நாம் இதுவரையில் நினைத்திருந்த கலிங்க நாட்டரசரது புதல்வியாகிய புஷ்பவல்லி, மிகவும சாதுர்யமாய் எங்களுடைய நட்பைப் பிரித்ததும். எனது தோழராகிய இளவரசர் என் மீது கோபங்கொண்டு இந்நகரை விட்டு ஒருவருடனுஞ் சொல்லாது சென்றதும், என் பிதா இளவரசரைக் கொண்டுவந்தாலன்றி தன் வீட்டுவாயிலில் அடிவைக்க வேண்டாமென்று கூறி என்னை மனையினின்றும் துரத்தியதும், இவைகளெல்லாம் இங்கிருக்கும்படியான எல்லோர்க்குந் தெரிந்த விஷயமே!

எல்லோரும் ஆம்! ஆம்!

புத். பிறகு நடந்த விர்த்தாந்தங்களைச் சற்று விவரமாய் இனிக் கூறுகிறேன். நான இந்நாட்டைவிட்டுச் சன்யாசி வேஷம் பூண்டு பலதேசங்களிலுந் திரிந்து, கடைசியாக ஒரு பெரிய ஆரணியத்தின்கண் அகப்பட்டு வழி தெரியாது வருந்துகையில, ஒரு மஹாரிஷியினது கிருபையினால் என் நண்பனிருக்குமிடமும் அவருக்குச் சீக்கிரத்தில் ஏதோ ஒரு பெருங்கெடுதி விளையு மென்றும், அத்தீங்கு முடிவில் என்னால் நீக்கப்படு மென்றும், அறிந்தேன. பிறகு அக்காட்டினின்றும் வெளியே போக வழியறிந்து, அவ்வரசருடைய பட்டணம் போயடைந்தேன்; இரவாய் விட்டமையால் உள்ளே போக சேவகரால் விடப்படாது, ஒரு திட்டிவாயிலின் அருகாமையில் நான் கண் துயின்றபொழுது, நாம் ராஜகுமாரி என்று நினைத்திருந்த தனபால செட்டியின் மகளாகிய சண்பகமாலை, அர்த்தராத்திரியில் வெளியிற்செல்ல, நான் பின் தொடர்ந்ததும், அக்கொடும்பாவி தன் கணவனுக்கு துரோகஞ் செய்ததுமன்றி இளவரசரைக் கொன்றதும, அப்பழியை என் மீது சாட்டியதும், பின்பு இவ்வரசரால் நான் சிரச்சேத மடையும்படி விதிக்கப்பட்டதும், பின்பு மறுதினம் உண்மையை இவருக்கே நான் விளக்கியதும், இவ்விஷயங்க ளெல்லாம் கலிங்க தேசத்தரசருக்கே தெரியும்.

கலி. ஆம்! ஆம்! உண்மைதான். புத்திசேனனே! நீயோ சன்யாசி வேஷம் பூண்டு அங்குவந்தவன்?

புத். ஆம், ஐயனே.

விஜ. மஹாராஜா! நான் அன்றே சன்யாசி வேஷம் பூண்டவர் நமது மந்திரி குமாரரென்று கூறினேனே, பார்த்தீரா!

புத். அப்புறம் நான் எனது நண்பனுடைய பிரேதத்தை எடுத்துக்கொண்டு கங்கைக்குச் சென்று அதில் அப்பிரேதத்துடன் மூழ்கியிறக்கச்செல்லும் பொழுது, எனது மனையாளை ஒரு முறையாவது பார்த்துச் செல்லவேண்டுமென்று எனக்கு ஓர் ஆசைபிறக்க, நான் எனது மாமனுருடைய வீட்டிற்குச் சென்றேன். அங்கு அருந்ததியினுங்கற்பிற் சிறந்த இதோ நிற்கும்படியான பானுமதியாகிய எனது மனையாள், நான் சுகமாய் தன்னிடம் வந்ததற்காகக் காளிகோயிலுக்குச் சென்று, தான் செய்துகொண்ட பிரார்த்தனைப்படி, தனது வலது கரத்தைப் பலியாகக் கொடுக்கப் போகும்போது, காளிகாதேவி பிரசன்னமாய்த் தடுத்து, அக்கரத்தினுல் பரிசித்தால் பட்டமரம் தளிர்க்கும்படியாகவும் செத்த உடல் உயிர்க்கும்படியாகவும் வரமளித்தாள். இவற்றை யெல்லாம் பின்றொடர்ந்தறிந்த நான் பானுமதியைக் கொண்டு எனது பிராண நண்பனுகிய இளவரசரைப் பிழைப்பூட்டி இங்கு அழைத்து வந்தேன். மஹாராஜா, இதுவே நடந்த விர்த்தாந்தம்.

சந். அப்பா தோழா! நான் செய்த பிழைக்காக என்னை மன்னிக்க வேண்டும். என்னைப்பிழைப் பூட்டியதற்கு உனக்கு நானென்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

ந. புத்திசேனு, உனக்கு என்ன வேண்டுமென்றாலும் கேட்பாய் இவ்விராஜ்ய முழுதும் கேட்டாலும் தருகிறேன், கேள்.

புத் மஹாராஜா, இவ்வரசுக்கு உரியவர் எனது நண்பனே! ஆயினும் நானும்மைக் கேட்க வேண்டிய தொன்றுளது. இதோ நிற்கும் கலிங்கதேசத்தரசன் புத்திரியாகிய புஷ்பவல்லி அழகிலும் புத்தியிலும் நிகரற்றவள். எனது தோழனுக்கு இவ்விராஜ குமாரியை விவாஹஞ் செய்து கொடுக்கச்சம்மதிக்க வேண்டும்.

கலி. நகுலராஜனே, நானும் அதையே கேட்கலா மென்றிருந்தேன். எனக்குச் சம்மதிதான். குழந்தாய் புஷ்பவல்லி, என்ன சொல்லுகிறாய்?

ந. பழம் நழுவிப்பாலில் விழுந்தது போலும்; எனக்கும் சம்மதிதான்.

புத். தங்கையே, உனது கரத்தை எனக்குச் சற்றுக்கொடு. நண்பனே நீங்களிருவரும் நீடூழி காலம் தம்பதிகளாய் வாழ் வீர்களாக!

ந. புத்திசேனா, இவ்வளவு நன்மையும் உன்னால் விளைந்ததல்லவா? இதற்குக் கைம்மாறு உனக்கு நானென்ன செய்யப்போகிறேன்? சுமந்திரரே, புத்திசேனனைப் புத்திரனைப் பெறுவதற்கு என்ன தவஞ் செய்தீரோ?

சும. "மகன் றந்தைக்காற்று முதவியிவன்றந்தை என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்னும் திருக்குறளின் மகிமையை இன்றே நான் கண்டேன். அப்பா, புத்திசேனா, இளவரசே, நீங்களிருவரும் இனி இணைபிரியா நண்பராய் நெடுங்காலம் வாழ்வீர்களாக!

புத். அதற்குத் தடையென்ன?—இன்னும் நான் செய்யவேண்டிய காரியம் ஒன்றுளது. இந்த நன்மைகளெல்லாம் இதோ நிற்கிற, நான் பூர்வ ஜன்மங்களிற் செய்த பூஜா பலத்தால் மனைவியாகப் பெற்ற, பானுமதியின் நெறி திறம்பாச் செய்கையினாலல்லவா? பானுமதி, நீ எனக்குச் செய்த மஹோபகாரத்திற்கு உனக்கு நானென்ன பிரத்யுபகாரஞ் செய்யப் போகிறேன்! உன்னுடைய கற்பினாலல்லவா எனது நண்பன் உயிர் பெற்றது? இதோ உன் கையை முத்தமிடுகிறேன், அவ்வளவே நான் செய்யத்தக்கது! இவ்வுலகத்தில் ஒவ்வொரு ஸ்திரீயும் கற்புடையவளாயிருந்தால் துன்பமென்பது ஏனிருக்கும்?

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.